O7 19SHMw2:V
N48

ஸ்ரீ

உத்தரரங்க வாற்றுப்படை

என்னும்

வடவரங்க வாற்றுப்படை

(மூலமும் குறிப்புரையும்.)

பண்டிதர்

ப. ம. வேணுகோபால நாயுடு

சம்பகமாலினி, குலசேகரன், மகதன், மகாத்மா கபீர்,
வாழ்த்தலங்கல் முதலிய நூல்களின் ஆசிரியர்.
சரசுவதியந்தரதியின் பதிப்பாசிரியர்.
பள்ளிகொண்டை
திருவரங்கேசனார் திருத்தளியின் அறநிலயக்
காப்பாளர்.

1948

திருவல்லிக்கேணி
ஜீவோதயம் அச்சகத்துப் பொறிக்கப்பட்டது.

உரிமைப்பதிவு சர்வதாரிஹு

ஸ்ரீ

காப்பு

நம்மாழ்வார்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருவே! யென்செல்வமே! திகழ்வகுள பூஷணத்தென்
தேனே! தேனுறுங் கற்பகமே! கற்பகத்தின்
உருவார் நறுமலரே! உறுங்கனியே! கனியினறுஞ்
சுவையே! சுவையார்ந்த நறைப்பொகுட்டுச்
செய்யவள் தான்
விரும்பி யுறைமார்பன் விண்ணவர்கோன் திருவடிப்பா
துகையே! யன்பொழுகு நின் வடிவும் அருட்கண்ணும்
திருஞானமுத்திரையும் திருவடியு மென்னுள்ளத்
தோவா திருக்கவருள் திருநாவீ றுடையவனே.

———

ஸ்ரீ

முன்னுரை

வடவரங்க வாற்றுப்படை

ஆற்றுப்படை யென்பது, தமிழின்கண் வழங்கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. ஆற்றுப்படை என்பதற்கு வழிப்படுத்துதல் என்பது பொருள். அதாவது சிறந்த பயன் பெற்றான் ஒருவன் அதனைப் பெறாதார்க்குப் பெறுமாறு கூறிக் கொடையாளியின் நாடு, ஊர், பெயர், கொடைப்பொருள் ஆகிய இவற்றை எடுத்துக்காட்டி "ஆண்டு நீ செல்க" என அவர்களை வழிப்படுத்துதலாம். வடவரங்கத் திருமாலை வணங்கி உய்ந்தானொருவன் அங்ஙனம் வணங்கி உய்வு பெறாதவர்களில் புதுப் பொருள் விழையுந(அபூர்வஐசுவரியகாம)ரையும், கழி பொருள் தேடுநரை(பிரஷ்டஐசுவரியார்த்திகளை)யும், அணுவினுகர்ச்சியாரை(கைவல்யார்த்திகளை)யும், திருத்தொண்டு விழைவோரை(கைங்கர்யார்த்திகளை)யும் விளித்து, அவர்களை அத்திருமாலிடத்தே ஆற்றுப்படுத்த அறிவுறுத்தியதாக இயற்றப் பட்டது இந்நூல். இது தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை யியலில்,

தாவினல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

....

....

....

....

ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பின்
கால மூன்றொடு கண்ணிய வருமே.

என்ற சூத்திரத்தின் உபலக்ஷண வகையினமைந்தது. முருகனை வழிபெற்று வீடுபெற்றா னொருவன் அங்ஙனம் பெறாத ஓர் இரவலனை அம்முருகனிடத்தே ஆற்றுப்படுத்தியதாகக் கூறும் திருமுருகாற்றுப்படை முதலிய நூல்களைக் காண்க.

வடவரங்கம் என்பது தொண்டை நாட்டில் வேலூர்க்கோட்டத்து(வடவாறு காடு வட்டம்)ப் பாலாற்றின் கரையிலுள்ளதோர் திருமால் திருப்பதி. தமிழ், தெலுங்கு வடமொழி ஆகிய வற்றில் வல்லுநராகிய புலவர்கள் பலரால் பாடப் பெற்றது. இதனைப் பௌராணிகர் ' ஸ்ரீ உத்தரரங்கம் ' என்பர். இவ்விடத்தில் எம்பெருமான் பாலாற்றினிடைப் பள்ளிகொண்ட திருக்கோலமாக எழுந்தருளியிருப்பர்.

எனது நண்பரிலொருவரும், இவ்வெம்பெருமானிடத்தே மிக்க அன்பு பூண்டவரும், அவ்வெம்பெருமானுக்கு உளங்கொள விழாக்கள் இயற்றுவித்து, அவ்வக்காலங்களில் சுற்றமும் நட்பும் சூழவிருந்து அவனை மெய்ம்மறந்து வணங்கி உள்ளம் பூரிப்பவரும், கல்வியில் மிகுந்த ஆர்வத்துடன் மாணக்கர்கள் முன்னேற்றத்தைக் கருதுவதோடு அவ்வப்போது தோன்றும் நூல்களைத் தாமே அச்சிட்டு வழங்கிப் புலவர்களுக்கு மேன்மேலும் ஊக்கத்தை யூட்டுபவரும், சிறந்த செல்வச் சீமானுமாகிய கார்க்கூர் புல்லல சங்கரைய நாயுடுகாரு ஓர்நாள் இவ்வெம்பெருமானை ஓர் சிறப்பினில் உளமுருகி வணங்கி நின்ற வளவில், " எம்பெருமான் விஷயமாக ஏதேனும் ஓர் பிரபந்தம் பாடலாகாதோ ?" என, வெறும் வாயை மெல்லும் அம்மையார்க்கு ஒரு பிடியவலும் கிடைத்தாற்போன்று, உவகை பூத்து, அவர்வாய்த் தோன்றிய அம்மொழி எம்பெருமானது கட்டளையே என வேற்று, இதனை அவரது இல்லத்திலேயே நான் பாடி முடித்தேன். நூல் முடிந்தவாறே அவர்களுக்கு அதனை நான் தெரிவிக்க, அவர்கள் அடுத்த நாளே அதனைத்தாம் கேட்க விழைவதாகத் தெரிவித்து, நான் கார்க்கூருக்குச்செல்லவேண்டியவசதிகளும் செய்தனர். நூல்முழுவதும் கேட்டானதும், இதனை அச்சிடும் பணியைத் தமக்கே விட்டிடவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்த, நானும் வேறு கூற இயலாதவனுகி அவ்வரும் பணியை அன்பிற் சிறந்தவராகிய அவருக்கே விட்டிட்டேன். அவர்களும் இந்நூலைத் தமது அரும் பொருள்கொண்டு அச்சிட்டு உதவினர். அவர்களது பெருந்தகைமையும் கடவுளன்பும், தமிழ்மொழியின் முன்னேற்ற ஆர்வமும், என்றென்றும் பாராட்டற்பாலன.

பல்வகைத் தமிழ் நூல்களையும் உரையொடு வெளிக்குக் கொணர்ந்து தமிழுலகத்திற்கு அவற்றைப் பயன்படச் செய்தலையே தமக்குப் பொழுது போக்காகக் கொண்டவரும் அப்

பெருமுயற்சியினல் பிறவற்றைக் கவனிக்கத் தமக்கு ஒய்வு கிடைக்கப் பெறுதவரும் ஆகிய திருவல்லிக்கேணி ஸ்ரீ. உ. வே. வைத்தமாநிதி முடும்பை கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமிகள் இந்நூலைத் தமது ஒய்வில் காலத்தும் முழுவதும் பார்த்துத் தமக்குத் தோன்றிய சிற்சில ஐயங்களின் உண்மைப் பொருள்களை உணர்ந்து, சில குறிப்புக்களும் கொடுத்து, இதனைத் தாமே அச்சிட்டுத் தருவதாகக் கூறித் தாம் வேலையில் நீந்திக்கொண்டிருக்கும் காலையிலும் அச்சுவாகனத்தில் இந்நூல் ஏறும்போது உண்டாகும் குற்றங் குறைகளை முற்றும் களைவித்து இதனை இவ்வுருவினதாக்கித் தந்த பெருந்தகைமைக்கு என் தலையல்லாற் கைம்மாறிலேன்.

புராண வரலாற்றுச் சுருக்கம்,

1. பாலாற்றுப் பெருக்கு:— சூரிய குலத்தரசனுகிய இக்ஷ்வாகுவின் வம்சத்தவராகிய அம்பரீஷர் என்னும் ஓர் ராஜரிஷி, பதுமினியாற்றின் தெற்கேயுள்ள "பீஜாசலம்" என்னும் திருக்காழ்வரையில் எல்லா வுலகங்களுக்கும் தலைவராகிய ஸ்ரீமந்நாராயணனை நேரில் சேவிக்க வேண்டிக் கடுந்தவம் புரிந்தார். கடுமையாகிய தவத்தைச் செய்தும் அவரைக்காண முடியாமையினல், "வேள்வியாய்" நின்ற எம்பெருமானைக் குறித்து ஓர் யாகஞ் செய்ய ஆரம்பித்தார். அந்த வேள்வியின் பயனுய்ப் பத்மினியாற்றில் பால் பெருகியோடிற்று. அந்தப் பாலைக்கொண்டு யாகத்தில் பாயசம் முதலியன செய்யப்பட்டன. அது முதற்கொண்டு அந்த நதி பாலாறு எனப் பெயர் பெற்றது.

2. அம்பரீஷர் தவம்:— வேள்வியின் முடிவில் அசரீரி வாக்கு ஒன்று கேட்டது. அதாவது:—"சத்யவிரத க்ஷேத்திரத்தில் (காஞ்சீபுரத்தில்) விரைவில் பிரமன் அசுவமேதயாகஞ் செய்யப் போகிறுன். அப்போது கோபத்தைக் கொண்டவளாய்ச் சரசுவதியானவள் நதியின் உருவெடுத்து அவ்யாகத்தைக் கெடுக்கப் பெருவெள்ளமாகப் பாலாற்றில் புரண்டுவருவாள். அவ்வெள்ளத்தைத் தடுக்க ஆற்றின் குறுக்கே திருமால் படுத்தருள்வார். அப்போது நீரும் அவரைச் சேவிப்பீர்" என்பதே. அதை எதிர்பார்த்து அம்பரீஷரும் அவ்விடத்திலேயே பீஜாசலத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தார்.

3. ஆதிசேஷாவதாரம்:— பாலாற்றுக்கும் பீஜாசலத்துக்கும் இடையிலுள்ள மனேஹரமான இந்த உத்தரரங்க க்ஷேத்திரத்

தில் திருமாலின் திருவவதாரத்தை எதிர்பார்த்தவராய் ஆதிசேஷன் ஓர் ஐந்தலையரவாக அவதரித்து, அவ்விடத்திலுள்ள பூஞ்சோலைகளிலும் தோட்டங்களிலும் வாழ்ந்துவந்தார்.

4. **நான்முகன் வேள்வியியற்றல்:—** ஒரு காலத்தில் பிரமனது சபையில் "லக்ஷ்மி உயர்ந்தவளா? சரசுவதி உயர்ந்தவளா" என்ற ஓர் கேள்வி தோன்றிற்று. அதில் பிரமதேவன் இலக்குமி தான் உயர்ந்தவள் என்று கூறவே, சரசுவதிக்குக் கோபம் உண்டாக, அவளும் பிரமனைப் பிரிந்து பூலோகத்தில் ஸஹ்யபருவதத்தில் வந்து சேர்ந்தாள். அப்போது பிரமன், அசுவமேத யாகஞ் செய்யும்பொருட்டுச் சத்தியவிரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்து, சரசுவதியைப் பலமுறை அழைத்தும் அவள் வராமையால், தம்முடைய மற்றோர் பத்தினியாகிய சாவித்திரியை வைத்துக்கொண்டு வேள்வியைத் தொடங்கினர். இடையில் அசுரர்கள் பிராமண உருக்கொண்டு அவளிடம் செய்த கலகத்தினால் சரசுவதியும் ஓர் பேராற்றுப் பெருக்குருவெடுத்து யாகசாலையினுள்ளே புகவே, அங்கிருந்த ரிஷிகள் முதலானோர் அதனைக் கண்டஞ்சிப் பிரமாவை வேண்ட, அவரும் ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து அவ்யாகத்தைக் காத்தருளும்படி வேண்டிக்கொண்டார்.

5. **பகவான் திருவவதாரம்:--** அங்ஙனம் பிரமன் வேண்டிக் கொள்ளுமளவில், பங்குனி மாதம், அசுவினி நட்சத்திரம், சுக்ல பக்ஷம், திருதியை செவ்வாய்க்கிழமை கூடிய சுபதினத்தில் எம்பெருமான் **ஸ்ரீரங்கநாதன்** சங்கு சக்கரக் கதைகளுடனும், கௌஸ்துபம் வைஜயந்தி வனமாலைகளுடனும் ஸ்ரீபூமி நீளா சமேதராயும், பீதாம்பரதாரியாயும், சரற்கால சந்திரன்போன்ற ஆதிசேஷனாகிய படுக்கையின் மீது பள்ளிகொண்டவராய்ப் பாலாற்றின் குறுக்கே தெற்கே திருமுடியும், வடக்கே திருவடியும், கிழக்கே திருமுக மண்டலமும் உடையவராகத் தோன்றிச் சேவை தந்து ஓர் அணையாக அமைந்தார்.

6. **அம்பரீஷர் வரம்பெறல்:--** அப்போது அம்பரீஷர் அவ்விடத்திலே வந்து எம்பெருமானைக் கண்களாரச் சேவித்து (1) "இந்த க்ஷேத்திரத்தில் வசிப்பவர்களுக்கு என்றென்றைக்கும் இந்தச் சேவை இப்படியே தந்தருளவேண்டும் என்றும், (2) இவ்விடத்தில் வசிப்பவர்களுக்குத் தேக முடிவில் மேல் வீடு தந்தருள வேண்டும்" என்றும் இரண்டு வரங்களை வேண்ட, அவரும், அவ்வாறே அவற்றைக் கொடுத்தருளினர்.

7, செல்வியார் திருமணம்:— இந்த க்ஷேத்திரத்திற்குத் தென் கிழக்கிலுள்ள திருக்காழ்வரையின் உச்சியில் தவம் புரிதற்கு அழகிய ஓரிடமும், அதன் அருகே க்ருத்ர தீர்த்தம், அல்லது சம்பாதி தீர்த்தம் என்று வழங்கும் பக்ஷிதீர்த்தமும் விளங்குகின்றன. இந்தத் தீர்த்தத்தின் அருகில் ஜடாயுவின் உடன் பிறந்தவனாகிய **சம்பாதி** ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணி, எம்பெருமானை நேரில் கண்டு வணங்கத் தவமுயன்றான். அவனது தவத்தின் பயனாக ஓர் பங்குனி உத்தரத்தன்று அப் பொய்கையினிடையில் பூத்த ஓர் பொற்றாமரை மலரில் பங்கயச்செல்வியாராகிய திருமகள் ஓர் குழந்தையின் வடிவினராகத் தோன்றிச் சம்பாதியின் கண்களுக்கு இலக்காகினர். சம்பாதியும் அப்பச்சிளங் குழந்தையை எடுத்துச் சீராட்டிப் பாராட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வர, அவரும் வளர்ந்து, நாளடைவில் எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளிலே ஊன்றிய கருத்தினராய் அவரையே வணங்கி வந்தார். எம்பெருமானும், அவர் வளர்ந்திருந்த இடத்திற்குச் சென்று தமது உண்மை உருவைச் சம்பாதிக்குக் காட்ட, அவனும், உளமுவந்து தனது மகளாராகிய அச்செல்வியாரை எம்பெருமானுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான். அவர் செந்தாமரை மலரில் அவதரித்ததனால் **செங்கமலவல்லித்தாயார்** எனப் பெயர் பெற்றார்.

8. தீர்த்தங்கள்:— இந்த ஸ்தலத்தில் சாரசுவத தீர்த்தம் என்ற வியாச புஷ்கரிணி, குண்டதீர்த்தம், அம்பரீஷ தீர்த்தம், க்ருத்ர தீர்த்தம் என்ற சம்பாதி தீர்த்தம், வாலி தீர்த்தம், சார்ங்கதர தீர்த்தம், பாதாள கங்கை முதலிய தீர்த்தங்கள் பலவுள. அவற்றுள் இந்நூலுக்குத் தொடர்புடையன சில கூறப்படும்.

சாரசுவத தீர்த்தம் — வியாச புஷ்கரிணி:— இது வேத வியாசரால் ஸ்வாமி பூஜைக்காக நிருமிக்கப்பட்டதென்பர். குண்ட தீர்த்தத்தில் மூழ்கிய சரசுவதி இந்தத் தீர்த்தத்தில் வெளிக் கிளம்பினாள் என்பது புராணம். இது **எண்பத்துமூன்று புண்ய தீர்த்தங்களுள் ஒன்று.** திரேதாயுகத்தில் இந்திரன் இந்திராணியுடன் காட்டில் உலாவிக்கொண்டிருக்கையில், அவ்விடத்தில் கிளிகளின் உருவொடு கூடியிருந்த இரண்டு ரிஷிகளுக்கு அவனால் உயிர்ச்சேதம் நேரிட, அவனைப் பிரமஹத்தித் தோஷம் தொடர்ந்தது. அப்போது அவ்விடத்தில் தோன்றிய மரீசியின் புத்திரராகிய

காசியபமுனிவர் அவனைப் பார்த்து, "நீ உத்தராரங்க க்ஷேத்திரஞ் சென்று அவ்விடத்துள்ள வியாச புஷ்கரிணியில் தினந்தோறும் நீராடி, எம்பெருமானை வழிபட்டு ஒருவருஷம் க்ஷேத்திரவாசம் செய்தால் அந்தக் குற்றம் நீங்கும்" என்று கூற, அவனும் அவ்வாறே செய்து பேறு பெற்றான்.

2. க்ருத்ர தீர்த்தம் அல்லது **சம்பாதி தீர்த்தம்:—** இதற்குப் பக்ஷிதீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இது திருக்காழ்வரையின் உச்சியில் செல்வியார் கோயிலுக்கு அருகில் உள்ளது. இவ்விடத்தில் ஜடாயுவின் உடன் பிறந்தவனாகிய சம்பாதி தவஞ் செய்து எம்பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றவிடம். இந்தத் தீர்த்தத்தில்தான் திருமகள் திருவவதரித்தது.

3. அம்பரீஷ தீர்த்தம்:— இந்தத் தீர்த்தத்தின் அருகில் இராஜரிஷியாகிய அம்பரீஷர் தவஞ்செய்து வேள்வி இயற்றிப் பேறு பெற்றார். இது எல்லாப் பாவங்களையும் போக்கவல்லது. இந்தத் தீர்த்தத்தில் மூழ்குபவர் இஷ்டசித்தி பெறுவர்.

ஒரு நூலைப் படிக்குங்கால் பொருளறிவே யன்றி மொழியறிவும் படிப்போர் பெற வேண்டியது இன்றியமையாததாதலின், "முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவம்" என்னும் இலக்கணத்துக்கு ஏற்ப ஆன்றோரின் சொற்களும் சொற்றொடர்களும் இந்நூலில் ஆங்காங்கு எடுத்தாளப்பட்டன.

இந்நூலின் கண் காணப்படும் குற்றங் குறைகளைச் சான்றோர் பொறுப்பதுடன் இதின் முன்னேற்றத்தைக் கருதி அவர்கள் செய்யும் சீர்திருத்தங்கள் முதலியவை, நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்ளப்படுவதோடு, அத்திருத்தங்கள் அவரவர்கள் பெயர்களோடு அடுத்த பதிப்பில் வெளியிடப்படும்.

ஸ்ரீ

மைசூர் மஹாராஜா காலேஜ் அஸிஸ்டெண்ட் புரொபசர்

V. T. திருநாராயணாசார்ய ஸ்வாமிகள் M. A.

அருளியது

அறநூல் விரித்தருளிய திருநாரணன் திருவடிகளில் வரி வண்டாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதியான திருநாராயணபுரம் சம்பத் குமார யதிராஜ ஜீயர் திருவடி சம்பந்தியாகிய ஸ்ரீமான் வேணுகோபாலராமாநுஜ தாஸர் வடவரங்க வாற்றுப்படை என்னும் பிரபந்தத்தை வரைந்திருக்கிறார்.

ஒருநாள் பள்ளிகொண்டைப் பெருமாளைச் சேவித்து வரும் சமயம் சீரியவோர் பாகவதர் ஏவ, அநந்யமனத்தை முன்னிட்டு, வடவரங்கத்திலெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை ஸ்ரீவைஷ்ணவ முறையைப் பின்பற்றி ஒரு தோத்திரத்தை இவர் செய்தார்.

இப்பிரபந்தம் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழியின் பாட்டுத் தொகையை உட்கொண்ட வரிகளோடு கூடியிருக்கிறது. ஆதியில் சம்பந்தத்தோடு நமஸ்ஸால் விளக்கப்படும் உகாரமும் நின்றிருக்கிறது. நடுவில் மணவாளமா முனிகள் விஷயமான பிரபந்தம் மகாரத்தில் ஆரம்பித்து ஜீவாத்மாவின் நிஷ்கிருஷ்ட வேஷத்தைக் காட்டுகிறது. முடிவில் சர்வ சேஷியான எம்பெருமானது வாசகமான மூலமாகிய ஒற்றை யெழுத்தும் சேர்ந்திருக்கிறது. இதில்கண்டவிஷயம்'உலகம்உவக்கும்பொருள் அரங்கன் அளிக்கும் பொருள்தான்' என்னும்படி சர்வ சேஷியான ஸ்ரீமந்நாராயணனே சர்வரக்ஷகன் என்பதாம்.

விட்டுசித்தர் விரித்த வண்ணமே ஐசுவரிய கைவல்யங்களைக் காற்கடைகொண்டு எம்பெருமானை வாழ்த்துவதே கருமங் கண்டாய் என்று பகவத் சரணார்த்திகளோடு கூடிப்பல்லாண்டு பாடத் தொடங்கியிருக்கிறார். அநுகூலரை முன்னிட்டு, அரங்கன் மலரடிக்கு அடிமை செய்யப் பாரித்து, அவன் எழுந்தருளியிருக்கும் நன்னிலம், நல்ல வஸ்துக்கள் எல்லாவற்றையும் போற்றி, ஆசாரியனை முன்னிட்டு, மணவாள மாமுனிகள், உடையவர், ஆழ்வார் முதலிய திவ்யசூரி வர்க்கத்தை அவர்கள் தோன்றிய கிரமத்திலேயே சேவித்துப் பெரியபிராட்டியார் புருஷகாரமாகக் கஸ்தூரி ரங்கனையும், ஸ்ரீஉத்தரரங்கனையும் ஆழ்வார்களின் ஸ்ரீசக்திகளையே தொடுத்துத் துதித்து, பரமபுருஷார்த்தமான நித்ய கைங்கர்யத்

த்தைத் தரவேண்டும் என்றும் அதற்கு விரோதமானவற்றையெல்லாம் நிவிருத்தி செய்யவேண்டுமென்றும் பிரார்த்தித்து, அழகான சொற்களால் தாம் பிரார்த்தித்த வண்ணமே பிறக்கும் உபதேசித்து, ஆசாரியர் சாதித்த வடமொழிப் பாட்டுக்களின் கருத்துக்களால் பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

இவரது தூய வடிமையைத் திருவரங்கன் அங்கீகரித்துப் பாகவதர்கள் எங்கும் பரம்பிப் பல்லாண்டொலி சொல்லா நிற்குமாறு அருள வேண்டும் என்று ஆசார்யர் திருவடிகளில் பிரார்த்திக்கின்றேன்.

இத்துடன் இவரது பேருதவியால் ஆழ்வார்களுடையவும் ஆசார்யர்களுடையவும் நன்மொழிகள் எளிதில் அடியவர்கள் கைப்பொருள் ஆகவேண்டுமென்று விரும்புகின்றேன்.

வ. தி. திருநாராயணாசார்யதாஸன்.

ஸ்ரீ

சென்னை

திருவல்லிக்கேணி

ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி

அருளியது

இருவிகற்ப நேரிசைவெண்பா.

பண்டைப் பனுவல்கள் பாரித்த நற்பொருளைக்
கொண்டினிது கூறினான் கூர்மதியால்-தொண்டர்
மடமற வேணுகோ பாலனெனு மாண்பன்
வடவரங்க வாற்றுப்படை.

ஸ்ரீ

இந்நூலாசிரியர் மாணுக்கரும், வேலூர் அரசியலணங்கனுர் உயர்நிலைப்பள்ளி இயற்றமிழாசிரியருமான களம்பூர்

வித்வான் தங்க. நீலகண்டப் பிள்ளை

எழுதிய

சிறப்புப் பாயிரம்

பூமகள் கெழீஇய காமரு மார்பன்
விரும்பிடு மொழியா மருந்தமிழ் தன்னைக்
காசறக் கற்ற மாசறு சான்றோர்
இனிதே வாழ்தலி னனிபுகழ்க் கொண்ட
தொண்டையம் பதியினிற் பண்டைநாட் டொடர்ந்தே
சீரும் சிறப்பும் பேரும் புகழும்
கொண்டநற் றலங்கள் வேண்டிய பலவுள ;
அவற்றுள் வேண்டிய வேண்டியாங் களித்தலின்
பலவினை விட்டு விலகிடா வீயெனத்
தொண்டர் பல்லோர் தொழுதடி வணங்கி
தங்களா வியன்ற மங்களா சாசனம்
பலப்பல பாடிப் பரவிய பெருமையும்
தெள்ளிதி னுய்ந்து தேவனைத் தேடி
வள்ளியோர் பல்லோர் வாழ்ந்திடும் பெருமையும்
கொண்டநற் பள்ளி கொண்டையாம் பதியினில்
துலங்குநன் மளிகையென் றோமறு பெயரின்
விளங்கு குடியதில் களங்க மதில்லா
நன்முனி சாமி நாயுடு தவத்தால்
தோன்றிய தோன்றல் ;திருநா ராயண
புரத்தின ரென்றுஞ் சிரத்தினுல் வணங்கும்
சம்பத் குமார யதிரா சசீயர்
என்னுநல் லாசா னிடம்பயில் பேற்றுல்
வைணவ மரபுகள் முழுவது மறிந்தோன்;
ஊரிக் கலூரியி னுத்தமத் தமிழ்த்தொண்
டாற்றிய வதனெடு நம்மருஞ் சிறுரைப்
பிறர்தா மியற்றும் பீழைக் கிரங்கி
ஓய்தலின்றி யுழைத்ததன் பயனய்
வாய்தவி னூழூர் வளரிந் துயர்நிலைப்
பள்ளி தோன்றிப் பல்கலைக் கழகமாய்
நிலைபெறச் செய்தோன் ; அன்றியு மாண்டுத்
தனித்தமிழ்ப் புலமை பல்லாண் டியற்றி

ஒய்வு பெற்ற வுயர்குணச் செம்மல்;
வடவரங் கமெனும் வான்புகழ் நிறீஇய
இடமதிற் பள்ளிகொள் எழிலி வண்ணனைக்
காண்பது மவன்சீர்க் கழறுத லன்றியும்
வேட்கையின் கேட்பதும் பூட்கையாக் கொண்டோன்;
அவன்ற னருளா லவன்றிருத் தாள்கள்
வாழ்த்துமா வாழ்த்தி வணங்குமா வணங்கி
இறைவன தருளைக் குறைவறப் பெற்றோன்;
அருந்தமிழ் மொழியும் ஆங்கிலப் பாடையும்
வடமொழி யுடனே வடுகன் மொழியெனும்
பன்மொழி களையும் பயின்ற பெரியோன்;
எம்போன் றோர்க்கிங் கிலக்கண விலக்கிய
நூல்கள் பலவும் நுவன்ற சான்றோன்;
எந்தமிழ்க் குரவன்; செந்தமிழ்ப் புலவன்
நந்தமிழ் மொழியின் நன்னூற் பலவும்
இயற்றிய வியற்றமி ழிறைவ னாதலின்,
மாதவன் மாட்டோர் மட்டிலா வன்பினால்
இறைவனை யேத்தற் கேற்ற திருவென
தமிழ்மொழி வல்லா ரிமிழ்கடல் வரைப்பில்
வகுத்த வாற்றுப் படையெனும் வகையுள்
வடவரங் கவாற்றுப் படையெனு மிதனை
வினிய எளிய வின்தமிழ் நடையின்
இயற்றக் கருதி யியற்றுவ தறிந்து
கார்நிகர் வண்கைக் கார்க்கூர் சங்கரன்
என்னும் பெரியோன் தூண்டிய வதனால்
பள்ளி கொண்டையின் புராண மறிந்து
மக்கள் யாவரும் மகிழவும், நாமெலாம்
மாதவன் புகழை மாண்புடன் விரிக்கும்
இந்நூல் படித்தே இறையருள் பெறவும்
இயற்றினோ னெவனெனி லவனே புலகு
புகழு முத்தம குணத்தனும்
வேணுகோ பால னெனும்புல வோனே.

இங்ஙனம்
களம்பூர். வித்வான் தங்க. நீலகண்டன்
தமிழாசிரியன்
அரசிய லணங்கனூர் உயர்நிலைப்பள்ளி, வேலூர்.



ஸ்ரீரங்கநாதன்—பள்ளிகொண்டை.

ஸ்ரீரங்கநாய்ச்சியார்—பள்ளிகொண்டை.

ஸ்ரீ

வடவரங்க வாற்றுப் படை

காப்பு.

ஸ்ரீ ஆண்டாள்.

வேத முதல்வனை வேட்டநங் கோதையின்
பாதமே நந்தமக்கோர் பற்று.

நூல்.

நேரிசை யாசிரியப்பா.

உலக முவக்கு முவணப் புணர்ப்பொடு
பலவளந் தரூஉம் பரிசின் தெய்வத்
தென்னன் பொருப்பொடு மன்னுவேங் கட முமென்
கொன்னுறு மலையே துன்னும் நகிலா
நிலையா உலகின் நிலையென மலைதரு
அலையார் கலியே யலையா கலையா
பூவிரி பொலம்பொழிற் புகுதரு பொன்னியென்
காவிரி வருபுனல் மாதிரக் கனலி

குறிப்புரை :— 1 உவணப்புணர்ப்பு—உயர்ந்த உருவம். உவணம் உயர்ச்சி. 2. பரிசின்—தன்மையில். 3. தென்னன் பொருப்பு—பொதியமலை. வேங்கடம்—தமிழ்நாட்டு எல்லையாகத் திருமால் எழுந்தருளியிருக்கும் மலை. என்—என்கின்ற. 4. கொன்உறு—பெருமை பொருந்திய; நகில்—முலை. நகில்—பால்பகாவஃறிணைப் பெயர். 5. நிலையா...மலைதரு—நிலைத்து நிற்காத தன்மைஎன்று கூறும்படி அதற்கு உவமையாகும். 6. அலையார்கலி—அலைகளோடு கூடிய கடல். அலையா கலையா—அலைகின்ற ஆடையாக. 7. பொலம் பொழில்—அழகிய சோலைகள். 8. வருபுனல்—ஆறு. மாதிரம் கனலி—ஆகாயத்தில் விளங்

வழிவரு மானவன் வைவேல் வாளினன்
பழிப்பில் பாடிமிழ் பரிவினம் பரீடன்
செய்தரு வேள்வி சிறப்புறச் செயிரறு
பயமது பயந்து பதமுறப் பெருக்கிய
பானதி யாதி வானதி பலவும்
மான மார்பின் பீன வாரமா
அணிகொ ளறலே கணியைம் பாலாப்
பணிகொ ணிலமகள் பைம்பூண் மருங்கின்
முன்செய் வினையின் முற்படத் தோன்றிப்
பின்செய் வினைக்குப் பெய்குட மாகி
இடையுறு மஞரை யினிதெனத் துய்த்து
மடமுறு மக்காள்! வகுப்பல் கேண்மின்.
தோற்றம் பலவினு மூற்ற முடைத்து
சாற்று மக்கள் சன்ம மென்ப: அம்
மக்கட் பிறப்பை மாண்கொளப் பெற்றும்
தக்க வுணர்வும் தகைசா லொழுக்கமும்
மிக்கு மாந்தரு மிளிர்தலு மரிதே;
தொக்க வுணர்வொடு தொழுதகு சீர்சால்
விழுப்பமு மிளமையு வீங்குநல் லுரையும்
விழுவன வைகலின் விரைந்தே யென்றவோர்
தொல்பொரு டானு மொல்லப் பெறுதல்

கும் சூரியன். 9. வழிவரு மானவன்—வம்சத்தில் தோன்றிய வீரன். வை வேல் வாளினன்—கூர்மையாகிய வேலையும் வாளையும் ஏந்தினவன். 10. பாடு—பெருமை. பரிவு—அன்பு. 11. செயிர் அறு-குற்றம் நீங்கிய. 12. பயம்—பால். 13. உறப் பெருக்கிய-அழகுபெறப் பெருகி ஓடச்செய்த. 14. மானம்-பெருமை. பீனம்-பருமை. ஆரம்-மாலை. அணிகொள் அறல்-அழகிய கருமணல்; கணிஐம்பாலாக-சிறப்பித்து எண்ணப் படுகிற கூந்தலாக. 16. மருங்கு—இடை. 19. அஞர்—துன்பம். துய்த்து—நுகர்ந்து. 20. மடம்—அறியாமை; வகுப்பல்—சொல்வேன். 21. தோற்றம்-பிறவி; ஊற்றம்-அறிவுடைமை. 25. மிளிர்தல்—விளங்குதல். 27. விழுப்பம்—மேன்மை, குலம். நல்லுரை—புகழ்ச்சொல்: 29. ஒல்லப் பெறுதல்—பொருந்தப் பெறுதல்.

நல்கு நற்றவம் ; நயந்ததை யறியலோ
அரிதினு மரிதே ; அதனோ டமைதரு
திருந்திய வறிவுந் தெளிவுறப் பெற்றுப்
பண்டை நான்மறைப் பழம்பொருள் கண்ணன்
தண்டா மரையா டளிநா யகனெனக்
கொண்ட பூட்கையின் குரைகுழ லேத்தித்
தொண்டே புரியுந் தொழும்பரு மரியரே.

பொருள் விழைவார் (ஐசுவரியார்த்திகள்.)

1 புதுப் பொருள் விழைவோர் (அபூர்வ ஐசுவரியகாமர்)

ஆதலி லன்பினி ரமைவுறக் கேண்மின்.
"போதவிழ் தாமரைப் பொன்னியி னருடரு
அரசியல் மக்க ளருங்கிளை பொன்மணி
வரியொடு வாகன வடிமை யென்று
எண்வகைச் செல்வமு மெய்தில" வென்றும்,
"பண்ணு மிந்திரப் பதவியோ டியக்கன்
வாழ்வும் மதனது வனப்பும் வந்தில
தாழ்வது படரத் தளர்வேன் மன்னே!
என்னே உலகம்! என்னே உலகம்!!"
என்றும் பன்முறை யியம்பி யெள்கி
உள்ளம் நைந்தோ ருடலமு மெலிந்து
வெள்ள மனைய விழிநீர் பெருக்கி
எள்ளருந் திறத்தி னேதிலர் நகைக்க
வெள்கு மக்காள்! வியனுரை கேண்மின்.

35. பூட்கை—கொள்கை. 36. தொழும்பர்—அடியார் 38. போது அவிழ் தாமரைப் பொன்னி—அரும்பு விரிந்த செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள். 39. கிளை—உறவினர் 40. வரி—நெல். 42-43 இயக்கன் வாழ்வு—குபேரசம்பத்து. 43 மதனது வனப்பு—மன்மதனது அழகு. 49. எள்ளருந்திறத்தின்—பிறர்கண்டு எளனம் செய்யும் வகையில்.

2. கழிபொருள் தேடுநர் (பிரஷ்ட ஐசுவரியார்த்திகள்.)

" தலைமுறை பலவின் தகுவழி யீட்டிய
நிலையுறு பெரும்பொருள் நெருநல தாக
எற்றே? மனையொ டிசைமொழி மக்களைத்
துற்ற தளித்துத் துப்புர வாக்குவல்"
என்றே மாழ்கி யின்புட னவரை
ஒன்றிய மனத்தி னுயரிய நினை இக்
கன்றிய மனத்தின் கையின ராகி
நின்று நிச்சலும் நினைத்துள் ளுருகி
"வணிகத் துறையோ வளர்சே வகமோ
பணியின் வளமோ பல்வகை வினையோ
திரைமலி யார்கலி தேர்ந்து செலவோ
உரைமலி கல்வியை யுறுவார்க் குரைத்தலோ
செய்தங் கேத்திச் சேமநற் பொருளை
எய்துவ லெங்ஙன்? எய்துவ லெங்ஙன்?"
என்றென் றிரங்கி யேங்கிப் பன்முறை
குன்றெ னுடலமுங் குறைவுறு மக்காள்!
ஒன்ற துரைப்ப லுளங்கொளக் கேண்மின்.

அனுவினுகர்ச்சியார் (கைவல்யார்த்திகள்.)

நன்றென நினைஇ நலமா ருலகின்
அனுவி னுகர்ச்சியே யமையுமா லென்று
பணிவுடன் தனிமையிற் பயில்வ தென்னோ?
உமியைக் குற்ற வுறுகை நொந்து
தமியராய் வருந்தித் தளர்வார் போன்று
கைவல்ய மென்னுங் கடும்பாழ் வீழ்ந்து

52. நெருநலதுஆக—நேற்று இருந்தது இன்று இல்லை என்னும் படி. 53. இசைமொழி மக்கள்—இசைப்படப் பேசுகின்ற குழந்தைகள் 54. துற்று-உணவு; துப்புரவு-மேன்மை. 56. நினைஇ—நினைத்து. 58. நிச்சலும்—எப்போதும் 61. திரை மலி ஆர்கலி—அலைகள் மிகுந்த கடல். 62. உரைமலி கல்வி—புகழ் மிகுந்த கல்வி. 63. சேமம்—பாதுகாப்பு. 66. குன்ற என் உடலம்—, குன்று என்று சொல்லத்தக்க உடம்பு. 68. நலம்—நன்மை. 69. அமையும்—பொருந்தும் அதாவது பலன் கொடுக்கும்.

நைவரா யுள்ளம் நைந்து நலிந்தும்
விழித்து மிழித்தும் வியன்துயர் கொண்டும்
குழித்துங் கண்கள் கொண்டுள நும்மை
மண்டிணி ஞால மல்லன் மக்கடாம்
கண்டு நகைத்துக் கைகொட்டி யார்க்க
உற்றதென் ? உலகுண் டுமிழ்ந்த வெந்தை
பெற்ற மேய்த்துப் பெருவரை யெடுத்த
ஒருவ னிருக்க உறுதுய ரென்னை ?
திரும்புமின் திரும்புமின் தீயநுந் துணிவின்;
கையுறு கனியைக் கைக்கொளா துநீவிர்
மெய்யுற வருந்தி வெய்துற லென்னே ?
உரியதோ ருடலமும் பிரியுநா ளணுகுமுன்
தெரிந்து நீவிரும் தெளிமின் மக்காள்.
வம்பலர் துழாய்முடி வடவரங் காள்வான்
செம்பொன் முடியவன் செய்யவள் கேள்வன்
புனத்தார் காயா மேனிப் புனிதன்
தனக்கு விழாக்கள் தகுவகை கோலி
அருமறை யோதுந ரன்புகொ டியற்றும்
பெருவிழ வதனிற் பெட்புற மண்ணும்
மணமும் கொண்டவன் மாண்கழ லேத்துமின்.
பணமா டரவணைப் பள்ளிகொள் பரமனை
அடியவ ரியங்கு மணிகற் றளியின்
படியாய்க் கிடந்துன் பவழவாய்க் காண்பல்

74. நைவராய்-வருந்துபவர்களாய். 77. மண் திணி ஞாலம்-மண் நிறைந்த பூமி. 79. எந்தை—எமது தந்தை. 80. வரை—கோவர்த்தன மென்னும் மலை. 84. வெய்துறல்—துன்பமடைதல் 87. வம்பு அலர் துழாய்-வாசனை வீசுகின்ற திருத்துழாய். 88. செய்யவள்-இலக்குமி. 90. கோலி-இடங்கொள்ளப் பண்ணி. 91. அன்பின்-பக்தியோடு. 92. பெட்பு-அன்பு. மண்-திருவிழாக்கள் முதலியவற்றிற்கு முன்னாகத் திருமுளை (அங்குரார்ப்பணத்து) க்குச் சேர்க்கப்படும் மண். 93. மணம்—திருவிழா. 94. பணம் ஆடு அரவு-படத்தை விரித்து ஆடுகின்ற பாம்பு. 95. அணி கற்றளி-அழகிய கல்லால்

என்மின்; பிறவி யென்றூழ்ப் பிணியவிழ்
வன்ன வடிகளை வாழ்த்துவ லென்மின்;
அண்டக் குலத்துக் கதிபதி யாகி
இண்டக் குலத்திரு விளக்கே யென்மின்;
பண்டை நுங்குலம் பாற்றி வம்மின்;
தொண்டக் குலமது தோன்ற வுயர்மின்;

திருத்தொண்டு விழைவோர் (கைங்கர்யார்த்திகள்.)

எந்தை முதலா வெழுபடி தன்னிலும்
வந்து வழிவழி வணங்கி வாழ்ந்தோம்
என்பீர் நீவிரு மென்னுரை கேண்மின்;
அன்பிற் கோரிட மமைப்பல் வம்மின்;
பந்தனை தீரப் பல்லாண் டுபாடுமின்;
சிந்தனை நீங்கச் சிறப்ப தெய்துமின்.
மன்னிய பெரும்பொருள் மக்களு ணல்லீர்
துன்னிய வாழ்வதைத் துயரிலீர்! கருதின்
அங்கியின் பொலியு மவன தருளார்
செங்கை யாழியும் சீரிய வலம்புரிச்
சங்கும் நுந்தோள் சவியுறச் சார்த்துமின்;
பொங்கு மவன்றன் புகழ்சேர் நாமம்
தங்கிய உள்ளந் தகவில் நின்று
எங்கும் விளங்க வெய்துமின் தொண்டர்!
"இட்டதுந் தொட்டது மிகுத்தா மனமார்
குட்ட நெய்யின் விட்ட வல்சியும்

ஆகி அமைந்த கோயில். 97. பிறவி என்றூழ் பிணி அவிழ்—பிறவியாகிய கோடைவெயில் போன்ற நோயைப் போக்குகின்ற. 98. வன்ன வடிகளை-அழகிய திருவடிகளை. 99. அண்டக் குலம்-வானோர் கூட்டம். 100. இண்டக் குலம்-இடைச். சாதி. 101. பாற்றி-நீக்கி. 107. பந்தனை-பாசபந்தங்கள் 111. அங்கி-நெருப்பு. 113. சவியுற-அழகுபெற. 117—136. வரையிலும் கைங்கர்யார்த்திகள் கூறுவன. 118. குட்ட....வல்சி-ஆழமாகத் தேக்க விடப்பட்ட நெய்யோடு கலந்த சோறு.

அத்தா ணிச்சே வகமு மணிகொள்
அத்தத் தடைக்கா யணிகுண் டலமும்
பூண்பன புனைவன பூசுவ வனைத்தும்
ஏண்கொளத் தந்தெனை வெள்ளுயி ராக்குவோய்!
பிறர்க்கே யுழைத்துப் பெரும்பொருள் பேணிப்
பெறலரு மணியும் பீதக வாடையும்
பெற்றிவ் வுலகின் பெருமய லாழ்ந்தும்
கொற்றவ! நற்றவப் பயனே! உன்னை
விட்டே விட்டே விலகிக் கிடந்தேன்;
எட்டே யெழுத்தி னிணையறு பொன்மொழி
கற்றே னில்லையென் கண்ணே! மணியே!
எற்றே? கால மிழந்தே னிழந்தேன்.
எனநினைந் துருகி, யென்பெலாம் நெக்கிட
நனவே கனவா நாள்கழித் தேனை
உன்னுடை யருளா லுயர்பொரு ளாக்கித்
துன்னுஞ் சத்துவத் துறையினிற் போக்கி
எள்ளலிற் சிறப்பெனை யெய்தச் செய்த
புள்ளூர் பரம! போற்றுவ லுன்னடி"
என்பீர்! வம்மின்; என்பீர்! வம்மின்.

கட்டுரை.

இன்போ டவன திருப்பிடம் நுந்தம்
கன்ம மொழியக் காட்டுவல் வம்மின்.

புதுப் பொருள் விழைவோர்.

பொன்னும் பொருளும் புனைபூ ணுடையும்

119. அத்தாணிச் சேவகம்-பிரியாமல் பக்கத்திலிருந்து செய்யும் சேவகம். 120. அத்தத்து அடைக்காய்-கைகளில் கொள்ளப் பட்ட வெற்றிலைப் பாக்கு. 122. ஏண் கொள-பெருமைப்பட. 125. பெருமயல்-மயக்கம். 128. இணையறு பொன்மொழி-தனக்கு நிகரில்லாத அழகிய மொழிகள். 136. புள்ளூர் பரம-கருடனை வாகனமாகக் கொண்ட பரம் பொருளே. 139. காட்டுவல்-காட்டுவேன்.

என்றும் நில்லா ; எவ்வச் செல்வம்
உண்டாய போழ்தி னுறவா யிருந்தோர்
விண்டாய பினீங்கி விரைவது மறிவீர்,
அலைகட லுலகி னனைவரும் வியக்க
மலைதரு புழைக்கை மாவினந் தம்மொடு
அண்டம் நிமிர்ந்தோ ரம்புலி வகிர்ந்த
எண்டிசை புகழுமோ ரெழினிறை மாடமும்
பிண்டி பிண்டியாப் பிரிவதுங் காண்டீர்
கண்டிகை யாரம் தண்டிகை முதலாச்
செல்வ மனைத்துஞ் செல்வது மறிவீர்.
நல்லவ ரானீ ரல்லவ ராவீர்.
என்னே செல்வம்? என்னே செல்வம்?
பின்னிலை கருதிப் பெருமதி கொண்மின்.

கழி பொருள் தேடுநர்.

நீங்கிய பொருளை நீள நினைந்தே
ஓங்கும் வாழ்வை யுகக்கு மக்காள்!
பிரிந்த செல்வம் விரிந்தே வரினும்
திருந்தி நிற்ப தென்னே? தெளிமின்.
இருந்தே யுலகத் திரும்பொரு ளீட்டித்
திருந்தல ரடக்கித் திசையெட் டினையும்
வென்று மாதிர வெங்கைம் மாக்கள்

141. எவ்வம்-துன்பம் தரும். 142. விண்டாயபின்-(அந்தச் செல்வம்) விட்டுநீங்கின பின்பு; விரைவது-விரைவில் ஓடிப் போவது. 145. மலைதரு புழைக்கை மா-மலைபோன்றதும் துளையையுடையதும் ஆகிய துதிக்கையோடு கூடின யானை. 146. அண்டம் நிமிர்ந்து-ஆகாயத்தளவும் உயர்ந்து. அம்புலி வகிர்ந்த-சந்திரனையும் பிளவு படும்படியாகக் கீறி. 148. பிண்டி பிண்டியா-துகள் துகளாக. 149. கண்டிகை ஆரம் முதலியன ஆபரணங்கள். தண்டிகை-சிவிகை; பல்லக்கு. 156. விரிந்து-மிகுந்து அதிகமாகி. 159. திருந்தலர்-பகைவர். 160. மாதிரம்-திசைகள். 160. கைம்மாக்கள்-யானைகள்.

நின்று பிளிற நீளராத் தலையும்
நெளிய வாழும் நாட்களும் நிலையில;
தெளிமின்; தெளிமின்; தேர்வகை தேடுமின்.
உலகெலாம் வென்றே யுயிரினை யிழத்தலாம்
நலமில் லதனை நாடு மக்காள்!
இன்றே மிளிர்தரு மிரும்பொரு ளழியும்;
குன்றே எனுநுங் குவிபொருளோடும்;
நிலையி லொன்றை நிலையெனக் கருதி
மலையல்; மன்னும் மாண்பொரு டேடுமின்.
சென்ற செல்வமும் சீரிய தன்றே;
நின்றநும் பொருளும் நெருநல தாகும்;
இன்றே யதனை யிழித்தே யிகமின்;
நன்றே யொன்று நவில்வல் கேண்மின்.

கைவல்யார்த்திகள்.

உயிரி னுகர்ச்சியே யுணர்வ தென்னுச்
செயிரறு கைவல்யச் சேர்க்கையை நச்சிக்
கன்னு ருரித்துக் கைந்நோ யளை இ
இன்னு நுகர்ந்தே யினைவீர்! வம்மின்.
கருது பயனது கைவல்யத் தில்லை.
மருது தவழ்ந்த மாயனைத் தேடுமின்;
கண்டதே காட்சி கவினுற மெய்யிற்
கொண்டதே கோலமென் கொள்கையி னயர்ந்து
மலைப்பா லுண்டு மயலுறு மைந்தீர்!
சினத்தா லிலங்கை செற்றவன் றன்னைப்
பொன்ன னுடலம் போழ்ந்த பெம்மானை

161. நீளரா-பெரிய பாம்பாகிய ஆதிசேஷன். 167. குவிபொருள்-சேர்த்து வைத்த பொருள். 169. மலையல்-தடுமாற வேண்டாம். 172. இகமின்-விட்டு நீங்குங்கள். 173. நவில்வல்-கூறுவேன். 174. உயிரின் நுகர்ச்சி-கைவல்யம். 175. நச்சி-விரும்பி. 176. அளை இ-கலந்து. 183. செற்றவன்-அழித்தவன். 184. பொன்னன்-இர

உன்னி யிகமி னுணர்வின் கருத்தே.
உலகச் சூழலி லுழன்று நாட்களை
இலவே யாக்கி யிரங்குறு மக்காள்!
நுமக்குமோர் நுண்பொருள் நுவல்வல் கேண்மின்
நமர்தம ராவார் நந்தமக் கில்லை
இழந்தநும் செல்வ மிருக்கு மிடமும்,
பழந்தனம் பொதிந்த பண்பம ரிடமும்,
உண்மையை யெளிதி னுணர்த்து மிடமும்
தண்ணளி புரண்டு ததும்பு மிடமும்,
இன்னதென் றுமக்கே யியம்புவன் கேண்மின்.

தொண்டை நாடு.

அன்போ டுலகை யளித்தற் கவனும்
கோயில் கொண்டருள் குவலயத் தலங்களுள்
மாயிரு வேங்கடம் மன்னிய பெண்ணை
தீதறு பவழத் திகிரி தொடுகடல்
ஓது வரம்பா வுடையதும், நாகைத்
திரையனும் தெய்வத் திறங்கொள் சேய்க்கு
உரைகொள வளித்த வுத்தம ருலகாம்
தெண்ணீ ரகணியின் திறப்பெறப் பாய்தரு
தொண்டை நாட்டுத் தோமறு பதிகளில்

ணியன். 186. சூழல்-இடம். 189. நமர் தமர்-நம்மவர் தம்மவர். 191. பொதிந்த-மறைந்துள்ள. 193. தண்ணளி-எம்பெருமானது குளிர்ச்சி பொருந்திய அன்பு. 196. குவலயம்-பூமி. 198. பவழத் திகிரி-பவழமலை; தொடுகடல்-சகர புத்திரர்களால் தோண்டப் பட்ட இழைக்கடல் 199. நாகைத்திரையன்-நாகப் பட்டினத்துச் சோழன். 200. தெய்வத் திறங்கொள் சேய்-தெய்வத் தன்மை பொருந்திய குழந்தையாகிய தொண்டைமான். 202. தெள்நீர் அகணி-தெளிந்தநீர் பாய்கின்ற வயல்கள். 203. தோம் அறுபதி-குற்றம் நீங்கிய திருப்பதி· 199-203. வரிகளில் அடங்கிய வரலாறு:—நாகப்பட்டினத்துச் சோழன் நாகலோகத்துக்குச் சென்று ஓர் நாக கன்னிகையைப் புணர, அவளும் ஓர் ஆண் மகவைப் பெற்று, 'யான் பெற்ற புதல்வனை என் செய்வேன்' என்ன, சோழனும் அவளை நோக்கி, 'இம்மகவை

உலகந் தாங்கு முயர்விண் டெனவே
நிலவுங் காழ்வரை நேருந் தெற்காக்
கொந்தவிர் மகிழின் குளிர்நிழல் புரண்டு
சந்தனத் தடவரை யந்தரச் சாரல்
சைய நீங்கிச் சவியுறத் தெளிந்து
வையந் தாங்கு வானதி யன்ன
பானதி யதுவே பயன்பெறு வடக்கின்
ஆன வெல்லையா யமைந்த வகத்தது.
உத்தர வரங்கெனஉறுபே ருறுவது.
சித்த சாரணர் சிவணித் தொழுவது.
எத்திறத் தவர்க்கு மெய்துமிட மாவது.
பத்தியி னிறைந்தோர் பயன்கொள விழைவது.
தும்ம லிடரல் துயரின் விம்மல்
பொம்ம லாவலித்தல் பொருந்து மிவற்றின்
அரங்க மென்றே யழைப்பார் தமக்கவர்
மறமெலாஞ் சிதறி மாள வவரைப்.

ஆதொண்டைக் கொடிகளால் கட்டிக் கடலில்எறி; இம்மகவு உயிர்த்து வரின் இதற்கு அரசுரிமை தருவேன்' என்ன, அவளும் அவ்வகையிலேயே செய்தாள். குழந்தையும் அலைகளால் உந்தப்பட்டு உயிர்த்துவர அதற்கு அரசாட்சி கொடுத்தான் என்பது. திரை(அலை)களால் கொண்டுவரப் பட்டவன் ஆதலால் திரையன் என்றும், ஆதொண்டைக் கொடிகளால் கட்டப் பட்டவன் ஆதலால் தொண்டைமான் என்றும் அவன் பெயர் பெற்றனன். 204. விண்டு-மலை. உலகந் தாங்கும் உயர்விண்டு-மேரு. 206. கொந்து அவிர்-பூங்கொத்துக்கள் விளங்குகின்ற. வகுளம்-மகிழ். 207. சந்தன தடவரை-சந்தன மரங்கள் நிறைந்த அகன்ற இடங்களையுடைய மலை; அந்தரச் சாரல்-இருண்ட மலைப்பக்கங்கள். 208. சையம்-சஹ்யமென்றும் மலை. 209. வானதி—கங்கை. 213. சிவணி-பொருந்தி. 215. பயன் கொள விழைவது-தங்களது பக்தியின் பயனை நுகர விரும்புவது. 217. பொம்மல்-மிகுதி. ஆவலித்தல்-கொட்டாவி விடுதல். 219. மறம்-பாவம். 224. பண்

புனித ராக்கிப் புருடோத் தமன்தன்
தனித்த வைகுந்தத் தலத்திருத் துவது ;
விண்ணவர் தாமும் விரைந்து தாள்கள்
மண்ணிற் றேய்ந்து வணங்கு மாண்பது ;
பண்ணவர் பரமனைப் பாடிப் பணிவது ;
எண்ணவர் பலரு மிருந்தவம் புரிவது.

நாட்டுவளம்.

தேட்டருந் திறலுடைத் தேனது பொழியும்
வாட்டமில் சோலை வண்கொடிப் படப்பையும்,
கோட்டமார் செந்நெலிற் குவளையின் பிறப்பும்,
நாட்ட மனைய நளினத் திட்டமும்,
மாந்தளிர் கோதிய மடக்குயில் தன்வாய்
தீம்பலாக் கனியில் தீட்டுறுங் காட்சியும்,
எக்கல் நுண்மண லேறியோ ரெங்கும்
கொக்கின் பழமதைக் குவிக்குந் தோற்றமும்,
பலவின் கனியைப் பறித்த மந்தியை
குலவு சங்கைக் கொண்டே ருழவர்
எறியத் தெங்கின் இளநீர் தன்னை
பறித்த தெறியும் பண்பமர் காட்சியும்,
அந்தார் கழுநீ ரசைய வாடையின்
பைந்தலை யரவெனப் பயந்து பார்ப்புக்
கத்திக் கத்திக் கலுழ்தல் கண்டு
மெத்தி மார்பிடை மென்மொழி கூறித்

ணவர்-முனிவர்கள். 225. எண்ணவர்-மதிப்புடைய பெரியோர் 226. தேடு அரும் திறல் உடைதேன்-தேடி அடைவதற்கு அருமையானதும் உண்டார்க்கு வலிமையை உண்டாக்குவது மாகிய தேன். 227. படப்பை-தோட்டம். 228. கோட்டம் ஆர் செந்நெல்—வயலில் பொருந்தியுள்ள செந்நெல். 229. நாட்டம்-கண்கள். நளினத்து ஈட்டம்-தாமரை மலரின் கூட்டம். 231. தீம் பல கனி—இனிமையான பலாப்பழம். 232. எக்கல்-குவியல். 233. கொக்கின் பழம்-மாம்பழம். 238. அந்து-வாவி. 239. பார்ப்பு-பறவைக்குஞ்சு. 240. கலுழ்தல்-கலங்குதல். 241. மெத்தி-அணைத்து. திசைச்சொல்.

தேற்றுங் குருகின் றீதில் காட்சியும்,
சேற்றுத் தாமரை சிரித்துச் சிரமசைஇ
வீற்றி னிருப்ப வதனை விழிதரு
குவளையு மாக்க முளோரை யற்றார்
துவள வணங்குமாத் தோன்று காட்சியும்,
நிமிர்தரு கைதையின் நீண்மலர் தன்னை
அமர்தரு குருகென வருபுனல் கெண்டை
அஞ்சி நடுங்கி யையெனப் பாய்ந்து
விஞ்சு வெள்ளம் விரையுங் காட்சியும்,
தீந்தே னுண்ட தெளிவில் வண்டு
தேந்தா மென்றிசை திருத்துங் காட்சியும்,
போந்தி னறவாற் புரைகொள் மந்தி
ஏந்து கலத்தை எற்றி வருமழை
கண்டு வெருவிக் கடுவனைக் கூஉய்
விண்டு கிளைகளின் விரையும் காட்சியும்,
அங்கியா ரசோகி னளியினம் முரலச்
செங்கட் கருங்குயில் செறிந்து மிழற்றும்
இன்பந் தரூஉ மெழிலமர் காட்சியும்,
துன்பம் துடைப்பார் தோமில் காட்சியும்,
மயிலிய லணங்கனார் மன்னி யரங்கின்
பயிலு நடத்துப் பயிறரு முழவின்
அதிரல் கேட்டாங் கையுறு குரங்கதை

243. சிரம் அசைஇ-தலையை அசைத்து. 244. வீற்றின்-பெருமையோடு. 245. ஆக்கம் உளோர்-செல்வர்கள். அற்றார்-ஏழைகள். 246. துவள-வாட. வணங்குமா-வணங்குவதுபோல. 247. கைதை-தாழை. 248. குருகு-ஓர்வகை நீர்ப்பறவை. 239. ஐயென-விரைவுக் குறிப்பு. 253. போந்து-பனைமரம். புரையுற-உண்டு மயக்கங் கொண்டு. 254. ஏந்து கலத்தை-கள்ளைக் குடிப்பதற்காகக் கையில் ஏந்திய கலயத்தை. 255. வெருவி-அஞ்சி. கூஉய்-கூவி. 257. அங்கி ஆர் அசோகு—நெருப்பைப்போல் சிவந்து மலர்கின்ற அசோக மரம். அளியினம்-வண்டுக்கூட்டம். முரல-ஒலிக்க. 258. மிழற்றும்-கூவுகின்ற. 261. அணங்கு அனார்-தெய்வப்பெண் போன்ற பெண்கள்.

முதிரு மசனியின் முழக்கென வஞ்சித்
தாவ, தெங்கின் நெற்றது தளர்ந்து
காவகப் பலவின் கனிமிசை வீழ
இற்றது ததையிலை இன்பமர் கதலியின்
முற்றிய துணர்மிசை முரண்டது சாயப்
பற்றொ டரம்பையு முற்றொரு தேனிறால்
தொற்றி யுடைப்பத் துவளும் நறவது
ஓடிச் செய்யி னோங்கு குவளையை
நாடி வளர்க்கும் நயங்கொள் காட்சியும்,
அருஞ்சூற் பச்சைப் பாம்பி னமைப்பென
கருவிருந் தீன்ற கதிர்மலி செந்நெல்
அற்பர் பொருளது ஆகுநா ணிமிர்ந்து
நிற்பது நேர நிமிர்தலை நிறுவியும்
முற்றிய வாறே முதிர்ந்த வுரவோர்
இற்றுக் குனிந்தவ ரிருப்பது காணென
இறைஞ்சு சிரத்தோ டிருக்குந் தோற்றமும்,
முறையி னகணியை முரச்சிப் பயன்கொளும்
மள்ளர் முழவொலி கேட்டு மழையெனத்
துள்ளி மஞ்ஞைக ளாடுந் தோற்றமும்,
அம்ப ரீட னருந்தவ மியற்றிச்

264. முதிரும் அசனி-பேரிடி. 265. தளர்ந்து-அற்று. 266. கா அகம் பலா-சோலையில் உள்ள பலா. 267. ததை இலை-நெருங்கிய இலைகள். 268. துணர்-குலை; முரண்டு-மாறுபட்டு. 269. அரம்பை-வாழை. 270. தொற்றி-பற்றி. 275. ஆகுநாள். சேர்ந்த காலத்து. 277. உரவோர்-அறிஞர். 278. இற்று-இவ்வகை. 280. அகணி-வயல்; முரச்சி-முற்று வித்து. "முரசு செய முரச்சிக் களிறு பல பூட்டி" என்பது பதிற்றுப்பத்து 441. 282. மஞ்ஞை-மயில். 283. அம்பரீஷன்...தலமும் (287), அம்பரீஷன் காழ்வரையில் திருமாலைக்குறித்துச் செய்த தவத்தின் பயனாக அவர் அவனது கண்ணுக்குத் தோன்ற, அவர் அப்போது எழுந்தருளியதுபோல எப்போதும் அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளித் தரிசனம்தரவேண்டும் என்றும், அவ்விடத்து உயிர்விடும் பிராணிகள் எத்தோற்றத்தவாயினும் அவை செய்த பாவங்களினின்று அவற்றை விடுவித்து அவற்றிற்கு மோக்ஷந்தரவேண்டும்

செம்பொன் முடியவிர் சீதர னடிகளை
வணங்கி வாழ்த்தி வையகத் திருவரம்
இணங்கி யவன்றரப் பெற்ற விடமும்,
இரவொன் றிருக்க வினையில் வீடும்
தருவ லென்றவ னருளுந் தலமும்,

திருக்காழ்வரை. (பீஜாசலம்.)

குன்றுத் தேறல் கல்லலைத் தொழுகி
துன்று பறைக்குர லருவியின் தோய்தலும்,
அம்ப ரீடன தரும்புனல் தன்னொடு
இன்பம ரெருவைப் புனலு மிலங்கிச்
சித்த சாரணர் செறிதரு வேமத்து
எத்திசைத் திமிரமு மிரிய வகற்றி
மத்தமீ கையோடு மாறனை வணங்கும்
வித்தக மூட்டும் வியன்காழ் வரையும்,

என்றும் அவன் கேட்டுக்கொள்ள, அவரும்,அவற்றை அவ்வகையிலேயே கொடுத்தார். முத்திதருநகரங்களில் முதன்மையானதாகிய காஞ்சீபுரத்தில் எவனொருவன் மூன்று இரவுகள் வசிக்கின்றானோ அவனுக்கு மோக்ஷமுண்டு. ஆனால் எவனொருவன் இந்த வடவரங்க க்ஷேத்திரத்தில் ஓர் இரவு தங்குகின்றானோ அவனுக்கும் அந்த மோக்ஷம் நிச்சயம்: இதில் சந்தேகமேயில்லை என்பதாம்: இதனைக் கீழ்க்குறிக்கும் ஸ்தல புராண சுலோகத்தாலறிக:-

த்ரிராத்ரம் யோவஸேத் காஞ்ச்யாம் முக்தோ பவதி மானவ:
வஸந் உத்தர ரங்கேஷு ராத்ரிமேகாம் நஸம்சய:

289-90. குன்றுத்தேறல்...அருவி—மலைத்தேன் பாறைகளின் மீது வீழ்ந்து ஒழுகிப் பொருந்திய (முரசு போலும்) ஒலியையுடைய அருவி. 291. அம்பரீஷனதரும்புனல்—அம்பரீஷ தீர்த்தம். 292. எருவைப் புனல்-க்ருத்ரதீர்த்தம் அல்லது சம்பாதி தீர்த்தம் என்ற பக்ஷிதீர்த்தம். 293. செறிதரு வேமத்து-நெருங்கிச் செல்லும் காலத்து. 294. திமிரம் -இருட்டு. 295. மத்தமீ-தலைமீது; மால் தனை-திருமாலை. 296. வித்தகம்-ஞானம்.

புண்யத்ருவாநதி.

வேயி னுழைந்து வெண்முத் துதிர்த்துப்
பேயென வோடிப் பெருவரை யுடைத்துக்
குருளை யுருட்டிக் கொங்கவிழ் தருக்களை
மருளப் புரட்டி மல்லல் விசையின்
பாய்தரு தன்மையிற் பலரும் வெரூஉம்
வாய்தரு வளமுடை வண்பே யாறும்,

கோட்டை மதில்; அகழி.

அணியார் பொழில்சூ ழரங்க நகரான்
பணிவார் முடியணி பைந்துழா யடியான்
அகநகர் காக்கென வமைந்ததோ ராரையும்,
தகநிலை தன்னிற் ருழ்ந்த கிடங்கும்,

திருத்தேர் நிலை.

தேரி லரங்கனைத் தெய்வநா யகனை,
வாரிவந் தருள் வாணுதல் கேள்வனை,
வணங்கித் தொழவே வளர்புன் பிறவியும்
அணங்கிய தாக்கு மணிகொ ளிடமுடைத்
தட்டும் பாரும் தகைசால் கிடுகும்
மொட்டு மாரும் முற்பட நிலீஇ
பன்னகப் பாயற் பரமன் ருனும்
தன்னிட மமர்ந்தோர் தகைமை தோன்றக்

298. வேய்—மூங்கில். இது முத்துப் பிறக்குமிடம் 299. குருளை-ஆமை, நரி, நாய், பன்றி, மான், முயல் முதலியவற்றின் குட்டிகள். கொங்கு—பூந்தாது. 300. மல்லல் விசை. மிகுந்த வேகம் 301. வெரூஉம்-அச்சங்கொள்ளும். 305. ஆரை-மதில். 306. கிடங்கு-அகழி. 306-310 இதனை 'ரதஸ்த்வம் கேசவம் த்ருஷ்ட்வா புனர்ஜன்மம் நவித்யதே' என்ற சுலோகத்தோடு ஒப்பிடுக. 308. வாரி. கடல்; வாணுதல்-ஒளி பொருந்திய முகத்தையுடைய திருமகள். 310. அணங்கியது-கொல்வது அல்லது அழிப்பது. 311. தட்டு-தேர் நடு. பார்-தேரின் பரப்பு; கிடுகு-மரச்சுற்று. 312. மொட்டு-தாமரை யரும்பின் வடிவமமைந்தோர் பிரிவு, கூம்பு. ஆர்-கூடுகின் உள் செறிந்த கதிர். 314. தகைமை-பெருமை;

காற்றென வசைஇக் காண்போ ரழைத்திடும்
ஏற்றலி னமைந்த எழிலார் சிதவலும்,
வான்பறைக் குருகின் வரியினைப் பொற்ப
நோன்கா லசைப்ப நுடங்கு பதாகையும்,
ஊன்று கொடுங்கையோ டுயர்பட் டாடையின்
தோன்றும் பன்னிறத் தொழில்சேர் படிவம்
துன்னி யெங்கணுந் தூவிருந் தூட்டப்
பன்னுந் துறைகளிற் பரிவுட னுணைகொள்
கண்ணு ரெண்ணிடக் காவலர் மேவிப்
பண்ணு ரிமிழிசை பயிலப் பருவுடல்
சிங்க நான்குஞ் செங்கையின் வரிந்த
பங்கமிற் புடையல் பண்புட னேந்த
யாழோ ரெல்லரி யாங்கணு மதிரக்
கீழோ ரிடக்கை கெழுமிய குசையார்
வலவன் வலக்கை வயங்கு சூரல்
குலவி யசைப்ப வதிருங் கொய்யுளைக்
கால்வல் புரவிக் கடும்பரி நெடுந்தேர்
மால்கொள் பிரம்பும், மாலவன் கொண்டருள்

316-எற்றல்-தகுதி. சிதவல்-தேரிடக்கியம். 317. வான் பறைக் குருகின் வரியினைப் பொற்ப-ஆகாயத்தில் பறக்கின்ற கொக்குகளின் வரிசையைப்போன்று அழகு செய்ய. 318. நோன் கால்-வலிய காற்று. நுடங்கு பதாகை-ஆடுகின்ற கொடிகள். 320-321. படிவம் துன்னி—பல்வகை உருவங்கள் பொருந்தி. 321. தூவிருந்து-(கண்களுக்குப்)பரிசுத்தமான விருந்து. 323. கண்ணூர் ...காவலர்-தங்கள் தொண்டிலேயே கண்ணோக்கம் கொண்டுள்ளவர்களும் தங்கள் தங்கள் இடங்களிலிருந்து காவல் புரிபவருமாகிய வாயில் காப்போர் எண்மர். 324. பண் ஆர் இமிழ் இசை-பண்களில் வாசிக்கப் படுவதாகிய இனியஇசை. 327. எல்லரி-கொத்து மணி. 328. குசை-கடிவாளம். 329. வலவன்-தேர்ப்பாகன் "வலவனேவா வானவூர்தி" புறநானூறு 27. வயங்கு சூரல்-விளங்குகின்ற பிரம்பு. 330. குலவி-வளைத்து. குலவு சினைப் பூங்கொய்து என்பது புறநானூறு. 11 330-332 கொய்உளைக்...பிரம்பும்-கத்தரிக்கப்பட்ட பிடரி மயிரையும் வலிய கால்களையுமுடைய குதிரைகள் பூட்டப் பெற்ற விரைந்து செல்லும் பெருமையையுடைய

திருவடி கோயில்.

பிறவிப் பத்தினும் பிரியா திருந்து
உறவுத் தொண்டை யுத்தமர்க் களித்த
உரவோ னெனவே யொருபே ரிராமன்
கரவோ ரரக்கர் கால்களைந் தெடுத்த
ஒருவன் றனக்கே யுறுதுணை யாகித்
துருவித் திருமகள் தாநிலை யுணர்ந்தவள்
மருவி யவனிடம் மகிழொடு மன்னக்
கருவியாய காளையின் கோட்டமும்,

சந்நிதித் தெரு.

சாய்ந்து நிமிர்ந்தவன் சாற்றிற் சாமரை
வேய்ந்து, நெடுந்தலை விரிந்து, வியனமர்
குலையாம் குஞ்சக் குடையெனக் கொண்டு
நிலவு தொண்டது நெடுமாற் கியற்றுவான்
மண்ணி லிழிந்து மாநகர் துறந்த
விண்ணவ ரெனவே விளங்கொலி தெங்கும்,
அன்பி னுழ்ந்தவ னம்புயத் தாடொழு
மந்தணர் பதின்ம ரருமறை யோதி
ஐவகை வேள்வியு மிறப நூல்களின்
செய்வகை தெரிந்து செய்வோர் தாப

உயரத்தோடு கூடிய தேர் பழமையாக நிற்கும் திருத்தேர் நிலையும். 334. உத்தமர்-புருஷோத்தமரான திருமால். 335. உரவோன்-மனவலிமையை யுடையவனுகிய கருடன். 343. குலையாம் குஞ்சக்குடை—தனது தலையில் தோன்றித் தொங்கும் குலையே அரடாவில் (அழகுபெறக்) கட்டப்பட்ட குஞ்சமாக விளங்கும் குடை. 345. மாநகர்-தங்கள் தங்கள் இருப்பிடங்கள். 346. ஒலிதெங்கு-மிகுதியாகக் காய்த்துள்ள அல்லது தழைத்த தென்னைமரங்கள். 348. அந்தணர் காரணக்குறி-ஆழ்வார்கள் பதின்மர். 349. ஐவகை வேள்வி-வேதமோதுதல் ஆகிய பிரம யாகம், ஓமம் வளர்த்தலாகிய தெய்வயாகம், பலியீதலாகிய பூதயாகம், தர்ப்பண முடித்தலாகிய பிதிர்யாகம், இரப்போர்க்கு உணவு முதலியன ஈதலாகிய மானுடயாகம். அரில் தப-குற்றம் நீங்க. 350. தாபம்-சங்க சக்கர அடையாளங்களைத் தோள்களிற் பொருந்தப்பெறுதல்.

புண்டரந் தொண்டர் புகழ்சேர் நாமம்
எண்கொள் மந்திர மெனையா ளப்பன்
வேள்வி தம்மொடு விளங்கும் வித்தகர்
கேள்வி பலவாற் கேசவன் தமராய்
மறையோர் வாழும் மறுகிரு சிறையும்,

வியாச புஷ்கரிணி அல்லது சாரஸ்வத தீர்த்தம்.

முறையின் மொழியைக் கோத்த முனிவன்
தொட்டு, மகவான் துயரந் தீர்த்து
அட்ட நரசிங்க மண்மைய தாகித்
திகழுந் தீர்த்தத் தெண்பான் மூன்றில்
நிகழு மொன்றென நிலம்படீஇத் தேவர்
நாளும் மூழ்கி நயந்து நாரணன்
தாளின் வீழூஉம் தன்மைத் தாகி
விளங்கு மிரும்புனல் வியாசபுட் கரிணியும்;

திருவந்திக் காப்பு மண்டபம்.

உளங்கொளப் பதின்ம ருயர்மறை விழவில்
ஓதிச் சாத்தி யுவப்புடன் காப்பது
ஆதிக் கிடூஉ மம்மண் டபமும்,

351. புண்டரம்—ஊர்த்துவ புண்டரமாகிய திருமண் காப்பிடுதல். தொண்டர் நாமம்-அடிமைப் பெயர்கள் இடப்படுதல். 352. எண்கொள் மந்திரம்—திருவஷ்டாக்ஷர மந்திரம். எனையாளப்பன் வேள்வி-திருமால் பூஜை. 355. மறுகு இருசிறை-தெருவின் இரண்டு பக்கங்கள்: 356. முறையின் ...முனிவன்—வியாசன். 357. தொட்டு-தோண்டி. மகவான்-இந்திரன்: 358. அட்ட நரசிங்கம்—நரசிங்க மூர்த்தியின் எட்டுவகையான உருவங்கள் அமைந்த மண்டபம். 360. நிலம்படீஇ-நிலத்தில் விழுந்து. 363. இரும்புனல்—தீர்த்தம். 364. பதின்மர் உயர் மறை-ஆழ்வார்கள் பதின்மரால் அருளிச்செய்யப்பட்ட தென்மொழி வேதமாகிய நாலாயிர திவ்ய பிரபந்தம். 366. ஆதி-திருமால்.

திருவவதார மண்டபம்.

அடுத்தா ரணியவ தாரமண் டபமும்,

வாகன மண்டபம்.

எடுப்பு மீடுமி லீசன் றனக்கு
வகுத்தவா கனமண் டபமும், வையத்துப்

பாலாறு.

பகுத்த நலமெலாம் பண்புற நல்கும்
வானிலை நதியென வளங்கொளப் பாய்ந்து
பானிகர் பெரும்புனல் பயந்துமுக் கூடலின்
மூழ்குவார் தமது முன்வினை பின்வினை
ஏழ்கால் களைவது மெங்குந் தன்றடம்
ஆணவ நீக்கி யமலனைப் பரவும்
வைணவர் தமக்கு வாழ்விட மாவதும்
பன்னிய பைம்புனல் பலவி லொன்ருய்த்
துன்னும் பானதித் துறையுங் கண்டதில்
படிந்தரி யெனவே பரமனைப் போற்றிச்
சடிதியி னூல்கள் சமைத்த விடங்கள்
பத்தி னிரண்டின் பாங்குறத் திருமண்
ஒத்த சுண்ணமோ டொளிபெறச் சாத்துமின்.

372. முக்கூடல்-புண்யத்ருவா, கௌண்டிஞ்சி, பாலாறுஆகிய மூன்ருறுகளும் கூடுமிடம். 374. தன்தடம்-தன் கரையோரங்களில். 375. அமலன்-திருமால். 374-376. எங்குந்தன்றடம்... இடமாவது என்பதை,

தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா **பயஸ்விநீ**
காவேரி ச மஹாபாகாப்ரதீசீ ச ஸரஸ்வதீ
யேபிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேச்வர !
தேஷாம் நாராயணே பக்தி : பூயஸீ ஙிருபத்ருவா
க்வசித் க்வசித் மஹாராஜ த்ராவிடேஷு ச பூயச:

என்ற மஹாபாரத சுலோகத்தால் அறிக. பயஸ்விநீ என்றது பாலாறு. வரிகள் 226. முதல் 382 வரையில் கீழ்க்குறிக்கும் முடி

அத்த னரங்கன் அமரர் பெம்மான்
சுத்த ஞமமே சோர்வறு துணையென
நித்தந் தப்பா நியமந் தன்னைச்
சித்தத் தமைத்துச் சீர்பெற வியற்றிப்
பத்தியின் துழாயோ பரிமள மலரோ
சித்தியி னமைந்த சீர்சால் புனலோ
கனியோ கண்டோ காதலிற் கையுறை
நனிபே ருவகையி னயந்து கொளீஇ,

பைக் கவனிக்க :-வண்கொடிப் படப்பையும்(227), குவளையின் விழிப்பும் (228), நளினத் தீட்டமும் (229), தீட்டுறுங் காட்சியும் (231), தோற்றமும்(233), பண்பமர் காட்சியும்(237), தீதில் காட்சியும்(242), தோன்று காட்சியும்(246), விரையுங் காட்சியும் (250), திருத்துங்காட்சியும் (252), விரையுங் காட்சியும் (256), எழிலமர் காட்சியும்(259), தோமில் காட்சியும்(260), நயங்கொள் காட்சியும் (272),இருக்குந் தோற்றமும் (279), ஆடுந்தோற்றமும் (282), பெற்ற விடமும் (286), தலமும் (288), தோய்தலும் (290), வியன்காழ் வரையும், (296), பேயாறும் (302), ஆரையும் (305), கிடங்கும், (306), பிரம்பும் (332), கோட்டமும் (340), தெங்கும்(346), இருசிறையும்(355), வியாசபுட்கரிணியும் (368), அம்மண்டமும் (366), அவதார மண்டபமும் (367), வாகன மண்டபமும் (369), பானதித்துறையுங் கண்டு, (878), படிந்து போற்றி (379), சாத்துமின் (382).

387-389. பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா
ப்ரயச்சதி

தததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மந:

என்ற ஸ்ரீ பகவத்கீதை சுலோகத்தையும்,

பத்திரமும் பூவும் பழமும் புனலுமெனக்
கொத்தியலும் பக்தி யுடனுதவி—சுத்திய
தூமனத்தான் தந்ததனைத் துய்ப்பனவன் அப்பத்தி
ஆமனத்த தென்றுநா னோர்ந்து.

என்ற ஸ்ரீ பகவத்கீதை வெண்பாவையுங் கவனிக்க.

கோபுர வாயில்.

வாய்த்த வளமுடை வைகார்ப் பெழூஉம்
தோய்ந்து தொண்ட ரடித்துக டுலங்கும்
மதிதவ ழெழுநிலை மாடக் கோபுரம்
துதியுட னுழைந்து, துவச மாரும்
தம்பமுன் வீழ்ந்து, தண்டனிட் டெழூஉக்
கம்ப மாருநும் பழவினை கழிமின்.

ஸ்ரீமணவாள மாமுனிகள்.

மன்பே ரவையின் மதலையாய்த் தோன்றி
பொன்னி மணாளனும் பொருணிறை
பொன்மொழி
மாந்தி யவன்றன் மாண்பினை மனங்கொளீஇ
ஏந்திய கொள்கையி னெங்கோ னிவனும்
நற்சீ சைலேசன் நளின நறுமலர்
பொற்பின் பூண்ட புங்கவ னிவனென
ஓதி யெவரு முளங்கொளச் செய்த
ஆதியஞ் சோதித னருமறை யாகும்
மாறன் மறைக்கு மன்னு பெரும்பொருள்
கூறுஞ் சீயன்றன் குரைகழல் வணங்குமின்.

392. வைகார்ப்பு-ஒருகாலும் இடையறுது தங்கும் ஆரவாரம். 398. பொன்னி மணாளன்—இலக்குமியின் கணவனுகிய திருமால். 397-406. ஸ்ரீ மணவாள மாமுனிகள் என்ற ஸ்ரீ வைஷ்ணவ பரமாசாரியார் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியாகிய **தமிழ்மறைக்கு "ஈடு முப்பத்தாருயிரம்"** என்னும் விரிவுரையை அருளிச் செய்தபோது, அவைக்களத்தின் இடையில் அழகிய மணவாளன் ஓர் சிறுகுழந்தை வடிவினனுகத் தோன்றி, அவ்வரைப் புகழ்ந்து,

> "ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்தியாதி குணார்ணவம்
> யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜா மாதரம் முநிம்".

என்ற சுலோகத்தை அருளிச் செய்து, சபையினின்று மறைந்தருளினன் என்ற வரலாறு ஈண்டு அறிதற் பாலது.

தேவப் பெருமாள்.

கச்சி முனிக்குக் கையிற் றீவட்டி
நச்சிப் பிடித்த நாரண னெம்மான்
தேவப் பெருமா ளுமவன் றிருவடி

ஸ்ரீயாளவந்தார்.

மேவி வணங்கும் மேலோர் தம்மில்
வகுத்த வினாக்கள் வளங்கெழு மூன்றில்
மிகுத்த புலவனை வென்ற மீளியும்,

ஸ்ரீதிருக்கச்சி நம்பிகள்.

உக்கத் தொண்டே யுயர்வென வுணர்ந்து
பக்குவத் ததனைப் பாங்குட னியற்றி
அத்தி கிரியருட் பேரருளாளன்
நித்தந் தன்னொடு நெடுமொழி கூற
எத்திறத் தவரினு மிணையிற் பேறுகொள்
அத்திற நற்றவக் காஞ்சி பூர்ணனும்,

கூரத்தாழ்வான், இராமாநுசன், முதலியாண்டான்.

" சத்தி வாழ்வும் சால்பில் தவமும்
சித்திப் பேறும் முத்தியைத் தாரா

407. கச்சி முனி-திருக்கச்சி நம்பிகள். அவர் தேவப் பெருமாளுக்கு ஆலவட்டத் தொண்டு செய்துவரும் நாட்களில், ஓர் நாளிரவு தம் மடத்துக்குத் திரும்புகையில், இரவு மழைபெய்துஇருட்டாக விருந்தமையால், தம்முடன் வந்த அருளாளன் என்னும் ஓர் சிறுவனை அழைத்து, 'அருளாளா நீ தீவட்டி கொண்டுவா' என்ன, அவனும் மடத்துக்குப் போய்விட்டமையால், எம்பெருமானும் அவனுருவந்தாங்கி தீவட்டி பிடித்துக் கொண்டு சென்று அவரை மடத்தேற விட்டான் என்பது வரலாறு. 412. யமுனைத் துறைவர் என்ற ஸ்ரீயாளவந்தார் தமது இளமைப் பருவத்தில், ஆக்கியாழ்வான் என்னும் ஓர் பெரும்புலவனை மூன்று கேள்விகள் கேட்டுத் தோற்கடித்தார். 413. உக்கம்-ஆலவட்டம், 418. காஞ்சிபூர்ணன்-திருக்கச்சிநம்பிகள். வரிகள் 419—428, 429, 430, 432-433-ஸ்ரீபகவத் ராமாநுஜாசாரியரது உபதேசங்கள். 419, சத்திவாழ்வு—வல்லமையோடு கூடிவாழும் வாழ்வு.

எளிதி ஞகலி னெவையுந் துறந்து
களிப்பின் வீழ்ந்தவன் கழலிணை பணிமின்.
அட்டாக் கரமோ வனைவர்க்கு மாம்பொருள்
இட்டா ரொட்டா ரிணைதபு குலத்திற்
கெட்டார் பெட்டா ரெவரே யாயினும்
நட்டா ராவர் நாரண னடிக்கே;
பிரணவ முதலாப் பேரெட் டெழுத்தும்
அரணும் நமக்”கென அன்புட னருளி,
“ஒருகா லதனை யோர்ந்துநீ ருரைப்பின்
தருவனெம் பெருமான் றனதாட் டாமரை”
எனவே யறைந்தோ ரெழிலுறு கோட்டியின்
தனியே நின்று “தக்கீர்! வம்மின்”
துனிபெரு மக்காள்! துயரிலீர்! வம்மின்”.
எனவே யறைகூ யவ்வெட் டெழுத்தைத்
தொனியி னுரைத்த துவரி னுடையன்
தனிபெரு முக்கோல் தாங்குங் கையினன்
தண்டு பவித்திரந் தம்மொடு மிருந்து
மண்டி மண்மிசை மயங்கிய மக்களாம்
அடியா ரவரை யன்போ டணைத்துப்
படிமிசை வீழ்ந்து பணிமி னீண்டே
பணியார் பாயற் பரமன் றுனும்
அணிவன் மலரடி நும்முடிக் கேயெனக்

424. இட்டார்-உறவினர். ஒட்டார்-பகைவர்; குலத்திற் கெட்டார்-குலத்தில் தாழ்ந்தவர்கள். 425. பெட்டார்-நண்பர். 427. பிரணவ முதலாம்-பிரணவத்தை முதலாகவுடைய; பேரெட்டெழுத்து-பெரிய திருமந்திரம் என்னும் பெயரினையுடைய திருவஷ்டாக்ஷரமந்திரம். 428. அரண்—பாதுகாவல். 430. தாள் தாமரை—திருவடிகளாகிய தாமரை மலர்கள். 431. கோட்டி-திருக்கோட்டியூர் அல்லது கோபுர வாயிலுமாம். 433. துனிபெரு மக்காள்-துன்பத்தை மிகுதியாகக் கொண்ட மக்களே. 437. தண்டு பவித்திரம்—கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் ஆகிய இருவரையும் ஸ்ரீராமாநுஜர் தம் பவித்திரமும் தண்டும் என்பர். தண்டு-திரிதண்டம். 440. ஈண்டே இவ்

163010

கூப்பு கையனுய்க் குறித்தவ னருள்விழை
பாப்பின் தோற்றப் பரமன் றானும்
நற்றவர் பலரும் நயந்துறை கோயில்
முற்றம் வீழ்ந்து மொய்ம்புற வணங்குமின்.

நம்மாழ்வார்.

ஆற்றின் மணலென் னருமா மறைகள்
வேற்றின் பொதிந்த வியன்பொரு ணற்றமிழ்
வேதம் வகுத்து, விண்ணவர் பெருமான்
போதம் மிகுத்த பொருநற் றுறைவன்
பிறவித் தளையைப் பிறவா தழித்துத்
துறவிக் கமுதாய்த் தோன்றிய பெம்மான்
இயலைத் தொடுத்தின் னிசையைப்
புணர்த்தெஞ்
செயலைத் திருத்தச் செந்தமி ழாயிரம்
நல்கிய தென்னை, நாவீறுடையான்,
வல்வினை தன்னை வழிவழி யாக்கிய
வகுளா பரணன், வாணுதல் கேள்வன்
வகுத்த பிறவியாம் வான்பத் தினையும்
தன்னொடு பத்தி னொன்றென் றாக்கிப்
பன்னு மருள்கூர் பராங்குசன், வந்தார்
பன்னகப் பாயலான் பதநிலை தன்பெயர்
மன்னு வகைசெய் மாறன், தன்னொடு

விடத்திலே அதாவது இக்கொடி மரத்தின் முன்பே அல்லது இப்பொழுதே. 444. பாப்பின் தோற்றப் பரமன்-ஆதிசேஷனது அவதார மூர்த்தியாகிய ஸ்ரீராமாநுசன். 450. போதம்-ஞானம். பொருநல்-தாம்ரபர்ணீ நதி. 451. பிறவித் தளையைப் பிறவாது அழித்து-பிறப்பு என்னும் ஓர் கட்டை மறுபடியும் தோன்றவொட்டாது அழித்து. 455. தென் ஐ-தென்னாட்டுத் தலைவன். 457-460-வாணுதல்...பராங்குசன்-திருமாலின் அவதாரங்கள் பத்தைத் தன்னொடு சேர்த்துப் பதினொன்று என்று கூறும்படி தோன்றிய பராங்குசன். 460-462. வந்துஆர்... மாறன்-காற்றை உணவாகக் கொள்ளுகின்ற பாம்பைத்

O-,195MMW2,V
N48

மற்றைய ஆழ்வார்கள்.

பொய்கை பூதன் பேயன் மழிசை
அய்யன் சேர வரையன் பட்டன்
பாதத் துகளொடு பாணன் கலியன்
கீதத் தமிழால் வேத முதல்வனைப்
பாடி மனங்கொள் பதின்மர் தம்மொடு
சூடிக் கொடுத்த சுடர்க்கொடி கோதை
மாறன் பதத்து மதுபமாம துரகவி
ஏறனு னுதமு னியுலகா ரியனெடு
பதிவி னிருந்து பரமன் பொன்னடி
துதிசெய் வார்தமைத் துயரற வணங்குமின்.
பழவினை கழியப் பல்லாண் டுபாடுமின்.

ஸ்ரீரங்கநாய்ச்சியார்.

குழகமர் மேனிக் கோமள வல்லியாம்
பாற்கடல் வந்த பதுமை, பனிநீர்ச்
சேற்கண் டாமரைச் செல்வி, அபயமும்
வரதமு மனைவர்க் குமருளும் வனசை,
விரத மென்மொழி விமலை, விளங்கு
மவன்ற னகல மகலாத் திருமகள்,
அவனி முழுதா ளம்மை, யரங்கத்
தொருபெருந் தேவிதன் றோடகத் தடிகளைக்
குருவின் னருளாற் குனிந்தங் கேத்தி,

தனக்குப் படுக்கையாகக் கொண்டுள்ள திருமாலின் திருவடி நிலைகள் தன் பெயராகிய 'ஸ்ரீசடகோபன்' என்று வழங்கும் படி செய்த நம்மாழ்வார். 466. கீதத்தமிழ்-இசைத் தமிழ். 468. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி-ஸ்ரீ ஆண்டாள். 469. மதுபம்-வண்டு. 470. ஏறுஅனுன்-காளை போன்றவன். 471. பதிவின் அழுந்திய மனத்தோடு. 474. குழகு அமர்-அழகு பொருந்தியுள்ள. கோமளவல்லி-இளமைச் செவ்வி நிறைந்த பூங்கொடி போன்றவள் 480. அரங்கத்து ஒரு பெருந்தேவி—ஸ்ரீரங்கநாயகி. 481. தோடகம்—தாமரை.

மன்னு மவடன் மாபெருங் கருணையின்
துன்னி நீவிரும் தாய்தரச் சென்மின்.

வாயில் காப்போர். (ஜய விஜயர்கள்.)

மருளது நீங்கு மனத்தின ராகி
அருவு முருவு மாகு மவன்றன்
தோரண வாயில் காக்குந் தூயோர்
பூரணப் பொற்கழல் புனைந்தங் கவரருள்
பெற்றுட் செலினே பெயர்தர விரும்பீர்;
நற்றவ மெல்லாம் நங்கைத் தென்பீர்.

திருவரங்கப் பெருமாள். (கஸ்தூரி ரங்கநாதன்.)

கார்க்கட னடுவண் கவின்வெண் டிரையின்
நார்க்கடப் பாய னாதர்க் காகும்
ஐவா யரவி லமைந்த கருமுகில்
பைகொண் முளரி பலபடப் பூத்து
கற்றைவெண் ணிலவொடு கருணையாந் தேவர்
துற்றுறு மமிழ்தந் துளித்துக் காலும்
முற்றுறு கலையின் முழுமதி தன்னையும்
பெற்றுப் பிறங்கொளி விளங்கும் பெருமலை
உற்றுச் சாய்ந்திங் குறுபொருள் கொள்ளெனத்
தெற்றென விடக்கை தெருளுற நீட்டி

489. செலினே—உள்ளே சென்றால்; பெயர்தர—திரும்பி வர. 491. கார் கடல்—கருமையாகிய கடல். நடுவண்—இடையில். கவின்—அழகு. 492. நார் கடம் பாயல் நாதர்—(பிற உயிர்களிடத்துக் காட்டும்) அன்போடு கூடிய உடலை (திருவனந்தாழ்வானை)யே தனக்குப் படுக்கையாகக் கொண்டுள்ள தலைவராகிய திருமால். 493. கருமுகில்-கருமையாகிய மேகம். 494. பைகொள் முளரி-அழகினைக் கொண்டுள்ள தாமரை. 495. கற்றை வெண் நிலவு-தொகுதியாகவுள்ள வெண்மையாகிய நிலா. 496. துற்றுறும்-உண்ணும். காலும்-கக்குகின்ற அல்லது ஒளிவீசுகின்ற. 497. முற்றுறுகலை-நிறைந்த கலைகளையுடைய. 498. பிறங்கு ஒளி-விளங்குகின்ற ஒளி. 500. தெற்றென-தெளிவாக.

நற்றவப் பங்கய நாண்மல ரடிகள்
பற்றொடு தொழுவார் படைத்தநற் பொருளெனக்
காட்டி வலத்துக் கவினுர் தடக்கை
தோட்டியின் வளைத்துத் துயரிலீர்! நும்மைப்
புரப்பான் புனைந்த பொன்முடி யீதென
நிரப்பு வினைசேர் நீண்முடி காட்டி
குடதிசை முடியொடு குணதிசை யடியும்
வடதிசை பின்பொடு வகுத்தவான் கண்ணிணை
தென்திசை துயிலும் தேவனை வணங்குமின்.
பொன்னிவர் மேனிப் புனிதன் றன்னை
வணங்கி யுவகை வளங்கொளப் பூத்து

ஸ்ரீஉத்தர ரங்கநாதன் (சயநேசர்-பள்ளிகொண்டான்.)

இணங்கி மேற்றிசை யிரீஇய பிரணவ
வாடக மானத் தறிதுயில் கோளிதன்
தோடகத் தொண்ட டியற்றுநர் தந்தேத்
தன்பின் கொணர்ந்த வகங்குழை கையுறை
இன்புட னளிமி னிருந்துழி யுள்ளம்
என்போ டுருக விணைக்கை சிரமிசை
புன்கண் தீரப் பொருந்துமே மாதோ.
பானதி காப்பண் பயன்பெறக் கிடக்கும்
கானலென் றொளிர்தரு கவினு ரைந்தலை
அரவஞ் சுமப்பதோ ரஞ்சன மலையும்,

501. நல்தவ பங்கயம்-எம்பெருமானது உறுப்புகளுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படும் தவம்பெற்ற தாமரை. நாண் மலர்-அன்று பூத்த செந்தாமரை மலர்கள். 504. தோட்டியின்-அழகுபெற. 506. நிரப்பு வினை—நிறைந்த வேலைப்பாடு. 512. இரீஇய-உள்ள. 512-513. பிரணவ ஆடக மானம்-பிரணவவடிவமாக அமைந்ததும் பொன் முடிகளமைந்ததுமான விமானம். அறிதுயில் கோளி-யோக நித்திரையை மேற்கொண்டுள்ளவன். 514. தோடகம் தொண்டு-திருவடித் தாமரைகளில் கைங்கர்யம். 518. புன்கண்-துன்பம். 520. கானல்-சூரியனது கிரணத்தின் ஒளி; கவின் ஆர்—அழகு பொருந்திய.

நிரவு பங்கயம் நிறைகொளப் பூத்தென
அம்மலை தன்னி னடியவர் தமக்கா
இம்மையு மம்மையு மெம்மையும் நீக்கி,
நுணங்கு முபாயமு முபேயமு மாகி,
வணங்குந் தொண்டர் வாழ்வென மிளிர்ந்து,
வளங்கெழு கங்கையாம் வானநீர் பயந்து,
உளங்கொள வுலகை யூட்டி, யன்றோர்
அருளா லவனியை யனைவரு முட்பட
இருபே ரடியா லளந்தமைத் தாங்கே
உற்றா ரற்றா ரெவர்க்கு முவகையின்
தெற்றென வளித்தவர்த் தெருட்டித் தெண்ணீர்ப்
பாய்திரைத் துகிரைப் பண்பி னீக்கிச்
சாய்தரு குவளையின் சந்தத் தாக்கும்
சீர்சா லடிகளும், சிறியவும் பெரியவும்
பேர்பெறு திங்களோர் பத்துப் பெயர்ந்து
மறுவில வாகி மன்னித் தோன்றும்
உறுவிரற் பத்தும், உலகம் யாவையும்
ஒருங்கே புணர்தரு முயர்நூ லன்ன
திருப்புற வடிகளும், திகழு மாவ
மொத்தொளிர் சங்கும், உம்பற்கரமும்
பத்திக் கலுழ னெருத்தமும் பன்னும்

525. உபாயம்-அடைவதற்குக் கருவியாக உள்ளது; உபேயம்—அடையும் பொருள். 529. அவனி—பூமி, உலகம். 531. உற்றார்-அடியவர்கள். அற்றார்-அடியவர்களாகாத மற்றையோர். 532. தெருட்டி-உண்மையறிவு கொள்ளும்படி செய்து. தெண்ணீர்-தெளிந்த நீர். 533-534. பாய்திரைத்...தாக்கும்-தன்னோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பாய்கின்ற அலைகளையுடைய கடலில் தோன்றும் செந்நிறத்த பவழத்தையும் அதனுடைய அழகினின்று நீங்கிப் பூத்துச் சாய்கின்ற குவளை மலர்களின் நீல நிறத்தையடையும்படி செய்கின்ற. 537. மறு-சந்திரனில் தோன்றும் முயல். 539. நூல்-புத்தகம். 540. ஆவம்-அம்பறாத்தூணி. 541. சங்கு—கணைக்கால். உம்பல் கரம்—யானையின் துதிக்கை. 542. கலுழன் எருத்தம்-கருடனது பிடரி.

வாமமும், கங்கையின் வலஞ்சுழித் தொழுகு
நாமச் சுரியலும் நவிலிலஞ் சியுமெனும்
உலகெலாம் படைக்க வொருநான் முகனை
இலகுவிற் றந்த வெழிற்பே ருந்தியும்,
பொற்றொடி மேகலை புனைபூ ணாரம்
விற்கொடு விளங்கு வீயா ரோதிப்
பெய்வளை பிறங்கு பீதக சரோருகச்
செய்யவ ளிறையும் தணத்தல் செய்யா
வாரமு மகிலும் நீவி யகன்று
வார மார்ந்து வண்ண முந்நூல்
தன்னொடு மணியும் தகைசால் மறுவும்
வன்ன மாலையும் வயங்கிக் காதலின்
வண்டுவாய் திறப்ப வகிர்நிலா விரிந்த
வெண்டோட் டுமல்லிகை விரியல் றன்னொடு
கழுநீர்ப் பிணைய லுமுழுநெறி பிறழத்
தொழுநீர்த் துழாயின் விழுமிய வலங்கல்
பின்னிப் பிறழ்ந்து பொற்கொடி தவழும்
பொன்மலை யன்ன வின்மலி மார்பும்,
பன்னு மைந்தருப் பாகசாதனன்

453. வாமம்-துடை 544. நாமம் சுரியல்-கண்டோர்க்கு வியப்பை உண்டாக்கும் நீர்ச் சுழி. நவில் இலஞ்சியுமென—சிறப்பித்துக் கூறப்படுகின்ற மகிழம்பூவும் என்று சொல்லும்படி விளங்கும். 548. வில்-ஒளி. வீ ஆர் ஓதி-மலர்கள் நிறைந்த கூந்தலை யுடையவள். 549. பீதக சரோருகம்-பொற்றாமரை. 550. தணத்தல்-விட்டு நீங்குதல். 551. ஆரம்-செஞ்சந்தனக் குழம்பு. அகில்-அகிற் குழம்பு; நீவி-பூசப்பெற்று. 552. வாரம் ஆர்ந்து-அன்பு நிறைந்து. 553. மணி-கௌஸ்துபம் என்னும் நீல மணி. மறு-ஸ்ரீவத்ஸம் என்னும் மறு. 554. மாலை-வனமாலை. 556. வெண் தோட்டு மல்லிகை-வெண்ணிறமான இதழ்களையுடைய மல்லிகை மலர். விரியல்—மாலை. 557. பிணையல்—மாலை. முழு நெறி—புறவிதழொடிக்கப்பட்ட முழுப்பூ. "கூம்பவிழ் முழுநெறி" புறநானூறு-116. 560. வில்-ஒளி, 561. ஐந்தரு-சந்தானம். மந்தாரம், பாரி

இந்திர ஞாலமயி னிருங்கர மென்ன
வந்து நீண்டு வளர்ந்து வனப்பில்
பச்சிலைப் பங்கயம் பகற்கண் டன்ன
வச்சமிற் றடக்கையாம் வளர்தா மரையும்,
பொன்ன னகலம் போழ்ந்த வுண்மை
தன்னை யுணரா தயிர்த்துத் தளரும்
மாந்தர்க் கிந்த மன்னு கைந்நகம்
சேந்த வகைக்குச்செறிந்த தென்னென
வினவி மெய்யை விரிக்கு முகிர்களும்,
நனவிற் பருமலை நயந்த விரண்டு
ஆரங் கண்டிகை யங்கத மணிந்து
சேருந் திறத்த சீர்சால் தோள்களும்,
மறுவொடு தேய்வும் வளர்வும் மாய்ந்த
உறுமதி யன்ன வுயர்முகக் கமலமும்,
நீலம் பூத்த நெடுந்தாட் டாமரை
கோலங் கொண்ட குளிர்மலர்க் கண்களும்,
ஞாலமோ என்னு நயன நாப்பண்
பால மிட்டுப் பகர்மா ணிக்கச்
செவ்வாய்க் கோபம் சீரிய வோதி
கவ்வச் சென்றெனக் கவின்கொ ணுசியும்,
நீருண் டலர்ந்து நிறைகேழ் செறிந்து
சீருண் மென்மொழி சிலவே விளங்கி
அமுத மூறி யருஞ்சுவை யளிக்குங்

ஜாதம், கல்பகம், அரிசந்தனம் என்பன. 564. பகல் கண்டு அன்ன—சூரியனைக் கண்டாற்போன்று அதாவது சூரியனது ஒளியால் மலர்ந்த செந்தாமரை மலர் போல. 569. சேந்த—சிவந்த. 571. நனவிற் பருமலை நயந்த—அகன்ற பருத்த மலைகள் போன்ற. 576. நீலம்......தாமரை—குவளை மலர் தன்னிடையே பூக்கப் பெற்ற நீண்ட தாள்களையுடைய தாமரை மலர்கள். 578. நயன நாப்பண்—கண்களினிடையில். 579—80. மாணிக்கச் செவ்வாய்—மாணிக்கம்போன்று சிவந்துள்ள உதடுகளாகிய இந்திரகோபம் என்னும் தம்பலப்பூச்சி. ஓதி—பச்சையோணன். 582. நீருண்டு அலர்ந்து-நீரைக் குடித்து

குமுத மன்ன குவிசெவ் வாயும்,
முத்தின் றொத்தோ முழுநில வொளியோ
வித்தா யறத்து விளங்கு முளையோ
அமுதந் துளித்த வணிநிரை கொல்லோ
நிமிர்தரு மெய்ம்முகிழ் நெடுங்குலை யதுவோ
எனவே வயங்கு மெழில்கொள் முறுவலும்,
வனசமும் வளர்செவ் வாம்பல் மலரும்
புனத்தார் பலாசப் போதும் பூணு
மினஞ்சேர் துகிரு மிலகு தொண்டையும்
வளங்கொள வுவமை யாகு மதரமும்,
உளங் கொளக் குளிர்ந்த வுயர்சிலை யென்ன
விளங்கு நுதலின் வியன்புரு விரண்டும்
வெளிப்படத் தோன்றி விதியி னூர்ந்து
வாளராக் கோளும் வையத் தியற்கையாம்
மாளலு மீளலு மறைந்த வட்டமி
மதியென விளங்கு மாபெரு நுதலும்,
உதிக்கும் பகலுவ னுயர்கதி ரென்ன
தரித்த சுண்ணமும், நாசிமூ லத்து
விரித்த முளரியின் விளங்குதி ருமண் ணும்,
காரோ மழையோ கனமா மறலோ
சேரா விருளோ செறிந்து, குழன்று,

மலர்ந்து. கேழ்—நிறம். 586. தொத்து—கொத்து. 587. அறத்து வித்தாய்—தருமத்தின் வித்தாய். 588. அமுதம் துளித்த அணி நிரை—தேவாமிருதத்தைத் துளித்த அழகிய வரிசை. 589. மெய் முகிழ் நெடும் குலை—சத்தியமாகிற மரத்தில் தோன்றின நீண்ட குலை. 590. முறுவல்—பற்கள். 591. வனசம்-தாமரை மலர். 593. துகிர்—பவழம். தொண்டை—கொவ்வைக்கனி. 595. சிலை—வில். 598. வாள் அராக்கோள்—ஒளி பொருந்திய பாம்பாகிய கேதுவினால் விழுங்கப்பெறுதல். 601. உயர்கதிர்—சிறந்த ஒளிப்பிழம்பு. 602-603. நாசிமூலத்து ... திருமண்ணும்—நாசியின் அடிப்பாகமாகிய மூலத்தினின்று மேல் நோக்கியிடப் பட்ட தாமரை மலராகிய இராமாநுசன்மீது விளங்குகின்ற தென் கலைத் திருமண் காப்பும், 604. கார்—மேகம். அறல்—கரு மணல். 605. செறிந்து—அடர்ந்து. குழன்று—திரண்டு.

நீண்டு, விரிந்து, நெய்த்து, நெடுநீலம்
பூண்டு, சரிந்து, புகையும் பூவும்
இன்றியே விரைகமழ் தெய்வக் குஞ்சியும்,
துன்றிய பாசத் துயரது நீங்கிப்
பள்ள வெள்ளமென் பத்தியி னிறைவால்
கள்ளமிற் சிந்தை கழுமிய ராகி
நம்மடி களாகு நாண்மலர்த் தாமரை
தம்மைத் தொழூஉம் சான்றோர்க் குறாஉம்
இன்ன லனைத்தும் முன்னம் நீக்கிப்
பன்னு மவர்தம் பணியெலா மியற்றி
நன்மையுந் தின்மையும் நலங்கொள நமதா
உன்னி யன்றோ வுயர்த்தின மெனவொரு
வலக்கை வணர்ந்து வளர்ந்து காட்டும்
துலக்குந் தொழில்வகை தோமறத் திளைத்து
ஐவகை யுருவிற் செய்வினை முதிர்ந்து
பையா ரரவின் பருமா மணியொடு

606. நெய்த்து—வழுவழுப்புப் பொருந்தி. நெடுநீலம் பூண்டு—மிக்க கருநிறத்தைப்பொருந்தி. 607-608. புகையும்......தெய்வக் குஞ்சி-அகில் முதலியவற்றின் வாசனைப் புகையும் நறுமணமுள்ள மலர்களின் வாசனையுமில்லாமலே இயற்கை மணம் வீசுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய திருக்குழற் கற்றை. 611. கழுமியர்—கலந்தவர். 'ஆத்தரக் கழுமியதுகளன் காய்தலுமுண்டு' புறநானூறு 258. 609—617-இதனைக் கீழே குறிக்கும் ஸ்ரீபகவத்கீதை 9—22வது சுலோகத்தாலும், ஸ்ரீபகவத்கீதை வெண்பா 22ஆலும் அறிக.

அநந்யாச் சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்.

வேறின்றி யென்னையெவர் மெய்ந்நினைந்து சேவிப்பார்
பேறொன்றி யென்றும் பிரியாதே—தேறமவர்
தம்பேறு யோக மிதுபிரியாச் சேமநான்
வன்பேறுச் செய்வன் மகிழ்ந்து.

618. வணர்ந்து-வளைந்து'வணர்ந்தேந்து மருப்பின்'மலைபடுகடாம் 37-616. தின்மை-தீமை. 620. ஐவகையுரு-தாமம், மகுடம், பது

சரை, மலம், கீற்று, சம்படி, பிளத்தல்,
கரிதுளை, விந்து, காகபாதம், மிருத்து,
கோடி யில்லன, கொண் ணுனி முறிந்தன,
நாடுந் தாரை நனிமழுங் கியவெனும்
அரிறப நீங்கிய வரும்பெரு மணிகள்
விரிசுடர் பரந்து வியன்கேழ் முரண்படு
பன்னிறச் சுடர்கால் பகலவ னென்னுஞ்
சென்னி பொலிவுறு செம்பொன் முடியைத்
தென்திசை வைத்துத் திகழ்வான் வடக்கின்
பொன்மல ரடியைப் போக்கிக் குடக்கின்
பின்ப தமைத்துப் பீடார் பிரமன்
தன்னை மகத்துத் தகைபெற வணங்கும்
கீழ்த்திசை நோக்கும் கிளரொளி யழகும்;
பாழ்த்த வுணர்விற் பயன தறியாது
தன்னைச் சிறைசெய் தகைவிலோன் மாளத்
துன்னிச் சிலையைத் துயரற வளைத்த
அரந்தை தீர வவன்றேள் வருடும்
திருமக ளெழிலும், திகழுமூ வுலகு
மீரடி யளந்த வெவ்வந் தீர
ஓரிரு கைகளா லுவப்புட னவனடி
வருடிச் சரண மாவன விவையெனத்
தெருளுறக் காட்டும் நிலமகள் தேசும்
பாற்கட னுப்பண் பங்கயம் பூத்த
கார்க்கட லன்ன கவினுர் மேனியும்

மம், கிம்புரி, கோடகம் என்பன. 622-625. சரைமலம்...தாரைமழுங்கல்-இரத்தினக் குற்றங்கள் பன்னிரண்டு. 627. வியன் கேழ் முரண்படு-மிக்கவொளியானது ஒன்றினேடொன்று வேறுபாடு கொள்ளுகின்ற. 629. பொலிவுறு-அழகு செய்கின்ற. 618ல் உள்ள காட்டும் என்பதை 629ல் உள்ளமுடியை என்பதனேடு இயைக்க. 635-விளர் விளங்குகின்ற 636. தகைவிலோன்—இராவணன். 638. அரந்தை—துன்பம் 641. ஓர் இரு கைகள்-(அவனதுதொண்டுக்கு அமைந்த) ஒப்பற்ற இரண்டுகைகள். 642. சரண்-புகலிடம். 644. நாப்பண்-இடையில். 645. கவின் ஆர்-அழகு பொருந்திய.

கண்ட வளவிற் கழிபே ருவகை
கொண்டு நீவிரும் கூடு மன்டின்
கோகுகட் டியவென் குரைகழல் வீழ்ந்து
ஈடு மெடுப்பு மிலீசன் றன்னை
வணங்கி வாழ்த்த வாயொன் ருகுமோ?
இணங்கி யவன்ற னெழிலது காண
கண்களோ ரிலக்கம் கலப்பினு மாகா;
விண்ணவர் நாயகன் விதைமுதற் கிழங்கனை
நண்ணு தெண்ணுள் நாசம தாக்கினேன்;
கண்ணுத லொருவனும் கரகக் கையனும்
இந்திரன் முதலா வியங்குவா னவரும்
வந்து வணங்கி வாட்க ணிமைத்திலர்;
கிட்டிய பொருளை விட்டுப் பன்னுள்
பட்டியி னகந்தைப் பாழின் வீழ்ந்து
பழுதே பலபகல் போக்கினேன் பாவியேன்;
புழுவினுங் கடையேன்; புன்மையி னிறைந்தேன்;
தன்மையு மில்லேன்; தனித்தே னிதுவரை;

பாற்கடல் வெண்ணிறத்த ஆதிசேஷனையும் கார்க்கடல் கருநிறத்தினனுகிய எம்பெருமானையும் குறிக்கும். 648. கோகு உகட்டி-அடைவு கேடாகத் தலை மண்டியிட்டு. அஞ்சன மலையும் (532) சீர்சாலடிகளும் (535), உறுவிரல் பத்தும் (538), திருப்புறவடிகளும் (540), சங்கும் (541), வாமமும், (543), பேருந்தியும். (546), மார்பும் (560), தாமரையும் (565), உகிர்களும் (570) தோள்களும் (573), முகக் கமலமும் (575), மலர்க்கண்களும் (577), கவின்கொள் நாசியும் (581), செவ்வாயும் (585), முறுவலும் (590), அதரமும் (594), புருவிரண்டும் (596), நுதலும் (600), சுண்ணமும் (602), திருமண்ணும் (603), குஞ்சியும் (608), அழகும் (634), திருமகளெழிலும் (639) நிலமகள் தேசும் 643), கவினுர் மேனியும் (645), கண்டபோதே (646) 647), கோகு உகட்டி வீழ்ந்து (648), வணங்கி வாழ்த்த வாய், ஒன்று ஆகுமோ? (650) எனவியைக்க. 655. கண்ணுதல் ஒருவன் -சிவபெருமான். கரகக்கையன்-கையிற்கமண்டலமேந்தியபிரமன். 659. பட்டி-களவு. அகந்தை—யான் என்னும் செருக்கு. 666-67. இடாது உற்று-ஐம்பொறிகளும் தம் தம் இயற்கைத்

நன்மைய தொன்றும் நாயேற் காகுமோ
எனுமுரைக் கவன்ற னெழிலமர் திருவடி
உனதே யாக உடலம் மறப்ப
உடன்மயிர் சிலிர்ப்ப வோங்குங் கரணம்
இடரதுற் றொருவழி நிலைக்கக் கரங்கள்
தலைமிசை யேறத் தாமோ தரனே!
அலைகடற் றுயின்ற வன்பே யமுதே!

தசாவதாரப் பரவல்.

வானோர ளவில் வளர்ந்த முந்நீர்
மீனாய்த் தோன்றிய மீளியே! யென்றும்,
வானவர் தானவர் வடவரை நட்டு
மானப் பாற்கடன் மதித்த காலை
ஆமை யொன்றா யருவரை தாங்கிச்
சேம வமுதஞ் செயிர்தீர் தேவர்
கொள்ளுந் தனையும் குளிர்கடல் கிடந்த
புள்ளூர் பரம! புனிதா என்றும்,
நீல வரையிரு நெடும்பிறை கவ்விச்
சால நிமிர்ந்து சகமது தாங்கிய
கோல **வராகமே**! குழகனே! என்றும்,
சால நொந்தே யோலமிட் டரற்றிய
பாலன் றனக்காப் பருந்தூ ணிடையே
ஞாலம் நடுங்கவோர் **நரவரி** யாகிப்
பொன்ன னகலம் போழ்ந்தம் மகற்கோர்
இன்னருள் செய்த விறையே! என்றும்,
ஒரு **மா ணுருவா** யுறுநிலந் தன்னை
இருபே ரடியாற் பெருமுறை யளந்த
ஒரு தனி முதலே! யென்றும், புரந்தரன்
பெரும்பொரு ளார்கலி பெயர்ந்திட வதற்காத்
தேவரும் பிறரும் தேர்ந்து பாற்கடல்

தொழிலினின்று நீங்கி இடர்ப்பட்டு. 671. மீளி—வலியோன். 673. மானம்-பெருமை. மதித்த காலை-கடைந்தபொழுது. 680. கோலம்-அழகு. குழகனே-அழகனே! 683. நரவரி-நரசிங்கம். 684. பொன்னன்-இரணியன். 636. மாண்-குறள். 688.

மேவி மதித்த வெல்வையி னெழுதரு
மாவி யகற்று மாலமு முண்டு,
உலக மூன்று முய்யப் பாய்ந்து
நிலவு கங்கையாம் நெடும்புனல் தன்னை
வகிர்ந்த விளம்பிறை தன்னொடு வார்சடை
வைகித்து, மேருவை வணக்கிச் சாபமா
வேற்று, முப்புர மெரித்து, வெங்கண்
கூற்றை யுதைத்த கோமா னிருந்த
வெள்ளி மலையை யெள்ளிப் பறிக்க
உள்ளிய உரவோன் றன்னை யொருகால்
தலையி னிட்டவன் றன்னையுந் தோள்கள்
கிளையென வெட்டிக் கீழே சாய்த்துத்
தொலைத்து நின்ற தோன்றலே என்றும்,
அலையார் பாற்கட லராவணை நீத்து
வெற்றி யூரின் வேந்தன் மைந்தனாய்ப்
பற்றொடு தோன்றிப் பத்துடை விதேக
மன்னன் பயந்த மாபெருங் கொடியைத்
துன்னி யரம்பையர் துயர்தீர் கோதையை
யணந்து, கேகயன் மகளாற் பொன்முடி
தணந்து, கானகந் தம்பியோ டேகி
நுணங்கு கேள்வியர் நுவலறு மதியினர்
வணங்கு முடியினர் வைதிக நெறியினர்
துன்புறு முகத்தினர் தூயோர் தமக்குக்

புரந்தரன்-இந்திரன். ஆர்கலி-கடல். புரந்தரன் பெரும் பொருள் ஆர்கலி பெயர்ந்தது துருவாச முனிவன் சாபத்தினால். 691. எல்வையின்—காலத்து. 692. ஆவி அகற்றும் ஆலம்—உண்டாரது உயிரைப் போக்கும் ஆலகால விஷம். 693. உலகம் மூன்று—சுவர்க்கம், பூமி, பாதாளம். 696. மேருவை வளைத்தது திரிபுர சம்ஹார காலத்து. 797-98. கூற்றை உதைத்தது மார்க்கண்டேயனுக்காக். 700. உரவோன் — வலியோனாகிய இராவணன். 701. தலையினிட்டவன்-கார்த்தவீரியார்ச்சுனன். 704. அராவணை-சேஷசயனம். 705. வெற்றியூர்—அயோத்தி. 708. அரம்பையர் துயர்—இராவணனால் சிறையில் வைக்கப்பட்ட தேவமாதர்களது

கனிவுட னபயங் கருணையி னளித்துக்
கதிர்வாண் முகத்தினள் கமலை யவடன்
பதிவினை யஞ்சனை பாலனா லறிந்து
கல்லார் மதிள்சூழ் கடிமதி ளிலங்கைப்
பொல்லா னாகம் போழ்ந்திட வரிசிலை
வளைத்த வில்லோய்! வானவா! என்றும்
இளையோன் வீடண னிருந்து வணங்க
வேண்டவற் கருள்செய் வேதனே! என்றும்,
பூண்ட வன்புட னழைத்தலும் போதராச்
செருக்கிய யமுனையைச் சீர்சா லலத்தால்
பொருக்கென விழுத்த புண்ணியா! வென்றும்,
காளிய னுச்சிக் கலங்கப் பாய்ந்தவன்
நீண்முடி யைந்தினு நின்று நடித்தோய்!
பின்னையை மணந்த பெருமா! வென்றும்,
முன்னிய நல்லருள் முடியுடை மன்னரை
அடைய வருள்செ யன்பனே! யென்றும்,
குடையா மலையைக் கோத்தவா வென்றும்,
கன்றினால் விளவெறி காளா! யென்றும்,
மன்றின் களித்த மன்னர் முன்னர்
சோர்ந்து வீழ்ந்துடல் சுருங்கி யலமர
வார்ந்த குழலும் வெளவிய வந்தகன்
காளையின் கையதாக் கண்ணவோ! வபயம்;
நீளையை மணந்த நெடுமால்! அபயம்;
சங்கொடு சக்கரந் தரித்தாய்! அபயம்;
அங்கையிற் றேமர மணிந்தாய்! அபயம்;
துவரை வந்தருள் தூயோய்! அபயம்;
எவரையுங் கைவிடா வெம்பிரான்! அபயம்;

துன்பம். 715. கதிர் வாள் முகத்தினர்—கிரணங்களோடு கூடிய ஒளி பொருந்திய முகத்தையுடையவர்கள். கமலை—திருமகளின் அம்சமாகிய சீதை. 716. பதிவு—இருப்பிடம்; அஞ்சனைபாலன்-அநுமான். 721. வேண்டு அவற்கு-அபயம் வேண்டியவனாகிய விபீஷணனுக்கு. 723. அலம்—கலப்பை. 732. மன்று—பலர் கூடிய துரியோதனனது சபை. 736. நீளை-திருமாலின் தேவிய

பெற்ற மேய்த்தவெம் பெருமான்! அபயம்;
பற்ப மலர்க்கணெம் பரமா! அபயம்;
நெடிமுடி பூண்டருள் நிமலா! அபயம்
கடுக வந்தெனைக் காத்தரு ளென்ற
ஐவரி னில்லாட் கருளியோய்! என்றும்;
ஐவர் பகையை யறுத்தோய்! என்றும்
இருநில மாந்தர் வருமுறை தவறி
பெருங்கலிக் கொடுமையிற் பிறழ்ந்து நடந்து
அறத்தைச் சிதைத்தின் னருளை யோட்டி
மறத்தை யோம்பி மயங்கு நாட்களின்
பரிமீ திவர்ந்து பண்டைய வறமதைத்
தெரிதர நாட்டுந் தேவே! யென்றும்,

2. பொது.

பன்னு ளிடங்கர் பற்றி வலித்துப்
புன்கண் செய்திடப் புழைக்கை மாவும்
அலறி மூலமே! அபய மென்ன
உலறுங் குறிப்பி னுறுகராம் போழ்ந்தே
அஞ்ச லென்னு மருட்கை காட்டிக்
குஞ்சரங் காத்த கோவே! என்றும்,
மாற்றுத் தாயவள் மனஞ்சுடப் புகன்றிட
ஈற்றுத் தாயவ ளிரங்கி யேங்கத்
தளர்ந்து தவமுயல் தனயன் றனக்கு
உளங்கொள விண்மீ னுயர்பத மளித்த
உத்தம!வென்றும் உயர்புக ழறநூல்

ரில் ஒருவர். 737—742.

சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம்

என்றதை இதனோடு ஒப்பிடுக. 738. தோமரம்—கதை. 745. ஐவரினில்லாள்—திரௌபதி. 746. ஐவர்—பஞ்சேந்திரியங்கள் அல்லது பாண்டவர்கள். 750. மறம்—பாவம். 751. பரி—குதிரை. 753. இடங்கர்—முதலை. 754. புழைக்கைமா—கஜேந்திரன். 758. குஞ்சரம்—யானை. 761. தனயன்—துருவன். 762. விண்மீன்—நக்ஷத்திரம். 766. குயின்—மேகம். 767. இருவரோ

வித்தக மன்று விளக்கியோ யென்றும்,
வையம திருண்டு வான ததிர்ந்து
குயினது கூடிக் குமுறிக் கொட்டுநாள்
இடைகழி யொன்றில் இருவரோ டொருவர்
மிடைந்து மயங்கியுண் மெலியு மெல்லையின்
ஞான வொளிக்கு நயந்தவ ரின்புறல்
ஆன பெரும! ஐயனே! என்றும்,
பாதப் புனலால் பகீரதன் முன்னோர்
ஏதமில் நற்பத மெய்து வித்தோய்
என்றும், எருவைக் கரசை இழிபுள்
என்று நினையா தவற்கு மீமப்
புனல தீந்த புனிதா! வென்றும்
அனிலத் தவன்சேய் தன்னொடு மார்வத்
துண்டோ யென்று, முவனியப் பிறப்பைக்
கண்டுனக் களித்த காதலந் தணற்கவன்
சிறுவனைக் கொடுத்த சீரியோ யென்றும்,
உறுக்கும் புள்ளினுக் குலைந்தவோ ருரகம்
சரணென நின்னடி சலித்து வீழ

டொருவர்—பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவர். 768. மிடைந்து—நெருங்கி, உள் மெலியும்—மனம் வருந்தும். எல்லையின்—காலத்து. 771—773. பாதப்......வித்தோய்—சகர புத்திரர்கள் கபில முனிவர் சாபத்தால் இறக்க, பகீரதன் தவஞ்செய்து ஆகாசகங்கையைக்கொணர்ந்து அந்நீரால் அவர்களை நற்கதி அடைவித்தனன் என்பது. 773—775. எருவை......புனிதா—எருவை-கழுகு. ஜடாயுவுக்கு ஸ்ரீராமபிரான் பித்ரு கைங்கர்யம் செய்தது. 776. அனிலத்தவன்சேய்—வாயு புத்திரனாகிய அநுமான். 776—777 அனிலத்...உண்டோய்—தனது வருகையை நந்திக்கிராமத்தில் இருந்த பரதனுக்கு அறிவித்துத்திரும்பிய அநுமானோடு ஸ்ரீராமபிரான் பாரத்துவாச ஆச்சிரமத்தில் வாழையிலையில் உண்டது. 777—779. உவனிய......சீரியோய்-பிரபாச தீர்த்தத்துக்குச் சென்றிருந்த சாந்தீபினியின் குமாரனை மீட்டு, மீண்டும் அவனை அவர்க்குச் சமர்ப்பித்தது. 780—782. உறுக்கும் - அதட்டிப்பயப்படுத்துகின்ற. உறுக்கும்...அளித்தாய் -சுமுகன் என்னும் ஓர்பாம்பு கருடனால் தனக்கு மரணமுண்டு

அரணை னநின் றதை யளித்தா யென்றும்,
குடமெடுத் தாடிய கூத்தா வென்றும்
படமா டரவிற் படுத்தோ யென்றும்,
வேதமும் வேதாந் தமுமற் றதன்மெய்ப்
போதமு மாய பொருளே யென்றும்,
பந்தார் விரலி பாவைக் காக
வெந்திறல் சேவேழ் வென்றோய்! என்றும்
பாலைப் பண்ணே! பதின்மர் பாவே!
வேலை முத்தமே! வேய்ங்குழ லிசையே!
சாதிமா ணிக்கமே! சவிகொள் பொன்னே!
ஆதியஞ் சோதியே! யவிவில் விளக்கே!
பாலே! வேதப் பயனே! சமய
நூலே! நுடங்கு கேள்வியே! என்றும்,
தாயுந் தந்தையுந் தமரு மாகி
வாயுமெம் மீசனே! வானவ! என்றும்
அந்தண ருருவி னருளில் தானவர்
மந்திர மொழிக்கு மயங்கிய நாமகள்
நான்முகன் வேள்வி நயந்த காலைப்
பான்முக வாறெனப் பரந்து தோன்றிக்
கூடு மகத்தைக் குலைப்ப னென்றே
ஓடு மலிர்நிறை யொழித்தோய் என்றும்,

என்பதை, அறிந்து திருமாலைச்சரணமடைய, அவரும் கருடனைக் கொண்டு அச்சுமுகனுக்குப் பிராண பிக்ஷைகொடுத்தார் என்பது. 786. போதம்—அறிவு. 787. பாவை நப்பின்னைப்பிராட்டி. 788. வெம்திறல் சேஎழ்-கொடியவலிய எழுஎருதுகள். 797—802 அந்தணருருவில்...ஒழித்தோய்—பிரமசபையில் தாழ்வுபட்டுத் தனித்து இருந்த சரசுவதியைத் தானவர்கள் அந்தணர்கள் உருக்கொண்டு சென்று, அவளை வணங்கிப் பிரமன் கச்சியம்பதியில் வேள்வி தொடங்கியிருப்பதையும், அதனை அவள் அழித்தலே தகுதியென்றதையும் எடுத்துக்கூறி, அவளைக் கோபமூட்டிச் செல்ல, அவளும் சஹ்ய பர்வதத்தின் மேலேறி ஆற்றின் வடிவமெடுத்துப் புரண்டு ஓடுவதைக் கண்ட ரிஷிகளெல்லாரும் பயந்து பிரமனைச் சரணமடைய, அவனும் திருமாலைச் சரண

பெண்ணின் மொழியாற் பேதைமை யுற்று
எண்ணு தவத்தினர் இருவர்க் கொன்ற
இந்திரன் சாபந் தீர்த்தோய் ! என்றும்
மந்திரத் துள்ளுறை மாலே ! என்றும்
மணிநிறங் கொண்ட மாமலை வெற்பின்
அணிநிற நோன்பின் பறைதபு குருகு
எருவைக் கிறைதன் னெழிலம ரணங்கை
மருவி மணந்த மைந்தா ! என்றும்
மறைகடுணிந்த மாதவா ! என்றும்
கறைமிடற் றவனும் கண்ணெட் டோனும்
தேடியுங் காணாத் தேவனே ! யென்றும்,
நாடிய வன்பர் நலத்தினோய் என்றும்,
மறைமுடி யாகு மந்திரப் பிரணவத்
துறையும் பொருளே ! தூயநின் னடியவர்

மடைந்து வேண்ட, அவரும் பாலாற்றின் இடையில் அணையாகப் படுத்து அவ்வெள்ளத்தைத் தடுத்தார் என்பது. 803—805. பெண்ணின்......தீர்த்தோய்—கங்கைக் கரையில் ஓர் பொழிலில் கிளிகளின் உருவெடுத்து விளையாடிக் கொண்டிருந்த இரண்டு முனிவர்களைத் தனக்குப் பிடித்துத் தரவேண்டும் என்ற இந்திராணியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவனாய் இந்திரன் பிடிக்க அவைஇரண்டும் கீழேவீழ்ந்து இறந்தன. முனிவர்களைக் கொன்ற பாவத்தால் இந்திரனுக்குப்பிரமஹத்தி தோஷம் தொடர்ந்தது. அது, இந்தஉத்தரஸ்ரீரங்கத்தில்உள்ளசாரசுவத தீர்த்தம்என்றவியாச புஷ்கரிணியில் ஒரு வருஷகாலம்மூழ்கிப்பகவானைவணங்கநீங்கிற்று என்பதுபுராணம்.808. அணிநிற...குருகு-அழகிய நிறத்தையுடைய தவத்தோடுகூடிய பறத்தல் நீங்கிய பறவையாகிய சம்பாதி. 809. அணங்கு-தெய்வப்பெண்; பங்கயச் செல்வியாராகிய செங்கமல வல்லித்தாயார்.807-810. திருக்காழ்வரையில்உள்ள க்ருத்ரதீர்த்தம் என்ற எருவைப் புனலில் பூத்த ஓர் பொற்றாமரை மலரில், திருமகள் ஓர் குழந்தை வடிவினராகத் தோன்ற, அவரை அவ்விடத்துத்தவம் புரிந்திருந்த சம்பாதி எடுத்து வளர்க்க, அவரை ஸ்ரீரங்கநாதன் சென்று மணந்தார் என்பது புராணம். 812. கறைமிடற்றவன்—நீலகண்டனாகிய சிவபெருமான். கண்ணெட்டோன்-

அருவினை கெடநின் னன்பி னேதுவில்
கருணை தேக்குங் கடலே! என்றும்
அடியவ ரரும்பிழை யருட்கண் காணு
நெடியோ! யென்றும், நெறிகொ ளுபாயமும்
உபேயமு மாகு மொருவனே! என்றும்,
அபேதவா தியரோ டறைகூஉய்ப் பேதம்
வாதிப் பவரும் வந்து வணங்கும்
சோதிப் பொன்னடி சூழ்ந்தோய்! என்றும்
தாயினு மாயின தருவாய்! என்றும்
வாயது படைத்த பயனு வாழ்த்தி,

உத்ஸவர்

ஆழி சங்கோ டம்போ ருகமும்
வாழி கற்பகத் தருவொடு வானிலாம்
படத்தோ டங்குசம் பாக சாதனன்
சுடர்கால் வச்சிரச் சூர்தரு படையின்
சூசன மமர்ந்து சுந்தரத் தோற்றத்
தாசன பத்மத் தமர்ந்த வடிகளும்,
முன்னீ ரலையென முடங்கிப் பல்கால்
தன்னீர்க் கெவருந் தகைசா லுவமம்
ஆத லிலரென வறைந்தவ னிடைசூழ்

பிரமன். 822. அறை கூஉய்—பொருதற்கு அழைத்து. 825. தாயினும்—தாயைக் காட்டிலும். ஆயின—பொருந்துமவற்றை. 827—830. ஆழி...படை சங்கு, சக்கரம், தாமரை, கற்பகம் கொடி, அங்குசம், வச்சிரம் ஆகிய இவற்றின் அடையாளங்கள் திருமாலின் திருவடிகளில் உள்ளன என்பது. இதனை ஸ்ரீயாளவந்தார் ஸ்தோத்திர ரத்னம் 31-வது சுலோகத்தாலும் அறிக

கதா புநச் சங்க ரதாங்க கல்பக
த்வஜார விந்தாங்குச வஜ்ர லாஞ்சனம்
த்ரிவிக்ரம! த்வச் சரணம்புஜ த்வயம்
மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி.

828. வானிலாம் படம் என்பதில் வானிலாம் என்பது இயற்கையடைமொழி, 831. சூசனம்—அடையாளம். 833. முன்னீர்... பல்கால்—கடலின் அலைகள் அடுக்கடுக்காய்ப் பன்முறையும் மடங்கிச் செல்வதுபோல. 834—835. தன்னீர்...அறைந்து—

பீதக வாடையின் மேதகு வழகும்,
உதர பந்தமு முயரரைஞா ணும்
மதித்து விளங்கு மணியிழை மருங்குலும்,
வாரிச் சுழிநிகர் வனப்பிவர் நாபியும்,
மாமறுத் தமலர் மார்பின் மறுவொடு
இறையு மகலாத் திருவும் மணியும்
நறைபொழி துழாயும் நாற்றவை ஐயந்தியும்,
முழந்தா ளளவும் முகிழ்த்து நீண்டு
அழகி னமைதரு மம்புயக் கரமும்,
அடியவர் வினையை யணுகா வகைசெய்
படிமிசைத் தோன்றும் பருநீர் நெடுந்தாள்
கஞ்ச மன்ன வஞ்சமெலன் கையும்,
அஞ்சனக் கேழவி ரங்கலி ழாகமும்,
விரிசிறை யுவணன் திருநக ரிழிந்துதன்
பிரிதரு சிறகைப் பெயர்த்து மணைக்குமா

எம்பெருமானது திருவரையில் சாத்தப்பட்ட பேறுபெற்ற தன் னுடைய தன்மைக்கு எவரும் தகுந்த உவமானம் ஆகமாட்டார் என்றுகூறி. 836. பீதகவாடை-பீதாம்பரம். 838. மதித்து-மதிக் கப்பெற்று. மணியிழை-இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்கள். 839. வாரி-கடல். வனப்பிவர்—அழகோடு கூடிய. 840. மா மறுத்த மலர் மார்பின்-திருமகள் பிறர் மார்பை மறுத்தற்கு ஏது வாகிய பரந்த மார்பில் “மாமறுத்த மலர் மார்பில்” என்பது புறநானூறு 7. மறு-ஸ்ரீவத்ஸம் என்னும் மறு. 841. இறையும்-மிக்க நுட்பமாகிய காலமும். 841. மணி-கௌஸ்துபம் என்னும் நீல மணி. ‘ஒலி நெடும் பீலியொண்பொறி மணித்தார்’ என்பது புறநானூறு 50. 842. மாலை-வனமாலை. நாற்றம்-நறுமணம். ‘பொன்மலர் நாற்றமுடைத்து’ என்பது நீதிநெறி விளக்கம். ‘நாற்ற நாட்டத் தறுகாற் பறவை’ என்பது புறநானூறு. 70. 846. படி-பூமி. பருநீர் நெடுந்தாட்கஞ்சம்-மிகுந்த ஆழமான நீரில் தோன்றிய நீண்ட தாளையுடைய தாமரை. 848. அஞ்சனம் கேழ் அவிர் அம் கலிழ் ஆகம்—மையின் நிறம் விளங்குகின்ற அழகு ஒழுகுகின்ற திருமேனி-‘அங்கலிழ்மேனி’..ஐங்குறுநூறு174. 849. உவணன்-கருடன். 849-850. விரிசிறை......அணைக்குமா-பரம

நின்று நிவறிப் பிரீஇ நெடுஞ்சிறை
துன்னு முத்தரீ யத்தின் தொகுதியும்,
சங்கு சக்கரந் தம்மொடு சார்ந்து
மங்குல் நிகரெனு மாழைக் கரங்களும்,
மகரக் குழைசேர் மாண்செவி யிரண்டும்,
இகரக் காதோ டிணைப்புறு கண்களும்,
முத்தினை யேய்க்கும் முறுவல் பூத்த
அத்தார் மலரென வலர்ந்த முகமும்,
நீண்டொளி தயங்கும் நெடுமுடி யழகும்
வேண்டார் தாமும் விழைபே ரழகும்
முன்னர் நின்றொரு மொய்ம்புடை யுவணனும்
பின்ன ரநந்தப் பெயரிய பாந்தளும்
வலத்து நின்றருள் வனசையு மிடங்கொள்
நிலமகள் தன்னொடும் நின்று நாற்புறம்

பதத்தைவிட்டு இவ்விடத்துக்கு இறங்கப் பறந்து வந்ததால் பிரிந்துள்ள தனது சிறகுகளை மீண்டும் அணைத்து நிற்பதுபோல. 851. நிவறிப் பிரீஇ-மேற்பாகம் சுருங்கி அடிப்பாகம் அகன்று பிரிந்து. நெடுஞ்சிறை-நீண்ட இரு பக்கங்கள். 854. மங்குல் மேகம். மாழை-அழகு. 852-853. நெடுஞ்சிறை......தொகுதியும்-நீண்ட இருபக்கங்களிலேயும் பொருந்தியுள்ள உத்தரீயத்தின் நீவிவிட்ட தொகுதியும். 856: இகரம்-அழகு. 856. ஏய்க்கும். ஒத்துள்ள. 858. அத்துஆர்மலர்—செந்நிறம் பொருந்திய தாமரை மலர்; செந்தாமரை மலர். 859. தயங்கும்—விளங்குகின்ற. 860. வேண்டார்...அழகும்—விரோதிகளும் கண்டு விரும்பத்தக்க சிறந்த அழகும். 862. பாந்தள்—பாம்பு; ஆதிசேஷன். 863. வனசை-திருமகள்; ஸ்ரீதேவிநாய்ச்சியார். 864. நிலமகள்—பூதேவி நாய்ச்சியார்.866. உய்த்து-தங்கள் கருத்தை முற்றும் செலுத்தி. பொற்பு-அழகு. 861-64.

அக்ரே தார்க்ஷ்யேண பச்சாதஹிபதி சயநேநாத்மநா பார்ச்வயோச்ச
ஸ்ரீபூமிப்யாமத்ருப்த்யா நயநசுளுகநைஸ்ஸேவ்யமாநாம்ருதௌகம்
வக்த்ரேணுவிஸ் ஸ்மிதேந ஸ்புரதபயகதா சங்க சக்ரைர் புஜாக்ரை:

வைத்த கண்ணை வாங்குத லறியா
துய்த்தவர் வணங்குமோர் பொற்பமர் மேனியும்
வணங்கி வாய்கொள வாழ்த்தி யவன்றன்
குணங்கொ ளன்பில் கூடிக் குதித்து,
வள்ளால்! உன்னை வணங்கவு மறிந்திலேன்;
கொள்ளுநின் குறிப்பிற் கூடவு நினைந்திலேன்;
நீசனேன்; கூடும் நிறையொன் றுமிலேன்
பாச மதுண்ட படிறனேன்; படிமிசை
குற்றமே நிறைந்த கொள்கையேன்; குறிக்கும்
நற்ற மொன்றும் நயந்திலேன்; நலனில்
நாயனேன்; நயந்துன் திருவடி யணுகினேன்;
பேயனேன்; காமப் பெருங்கடல் வீழ்ந்து
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்து
போதலே பொருளெனக் கொண்ட போழ்க்கனேன்;
நிலையில் பொருளை நிலையெனக் கருதி
உலைவில் துன்ப' முற்றனன் சிறியேன்.
கரும்பன மொழியார் காதலே பெருக்கி
அரும்பொரு ளறியா வாழ்க்கையேன்; பல்கால்
வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்;
கூடினே னுன்றுன் குரைகழல் குறிக்கத்
தகுவதோர் குணமும் தரித்திலேன்; உலகின்
மிகுவதோ ரொழுக்கு மிலைந்து மிலேனுன்

விச்வஸ்மை திஷ்டமாநம் சரணமசரணு ரங்கராஜம் பஜாம:

என்று பட்டர் அருளிச் செய்த ஸ்ரீரங்கராஜஸ்தவத்தின் 75வது சுலோகத்தைக் கவனிக்க. 871. நிறை-மனவுறுதி. 872. படிறனேன்-தூர்த்தன், ஆகிய நான். 880. உலைவுஇல்-அழிதல் இல்லா 883. வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் பெருந்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ டவர்தருங் கலவியே கருதி,
ஓடினேன் ஓடி யுய்வதோர் பொருளா லுணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன் நாராயணு

திருவடி குறுகவுந் திருந்திலேன் ; திகைப்பேன்
மருவு பொறையிலேன் ; மன்னுந் தெருள்கொள்
புந்தியு மில்லேன் ; புனிதனு மல்லேன் ;
வந்தோர் நல்லறம் வளர்த்தது மில்லேன்
தீயவல் வினையிற் றிளைத்தேன் ; நல்லோர்
தூய பாதத் துணையும் பற்றிலேன் ;
அருளினு மெனை நீ யமைவிலே னந்தோ !
இருளா ருலகி னிளைத்தன னெய்த்தேன்
அல்லார் மேனியு மாபா சவடிவும்
வில்லே றுநுதலும் விழுமிய பீர்தரு
குண்டு கண்ணுங் குனிபிறை யெயிறும்
மண்டிப் புடைக்கும் மருளுறு தண்டமும்
கொண்டு கரத்திற் கொடுமேதி யவனும்
நண்ணி யென்னை நயனில மொழிந்து,
நிரயத் தென்னை நெட்டுவ னென்றே
அரந்தையின் மூழ்கினின் னடியிணை யடைந்தேன்
கருணையே யுருவாங் கார்க்கடல் வண்ண !
உருவோ டருவா மும்பர் கோமான் !
எங்குப் போயு மெறிகடன் மீமிசை
வங்கக் கூம்பே வழிக்கொள் புள்ளென
உன்னை யன்றி யுற்றார் கண்டிலேன்,
என்னைப் புரத்த லெம்மான் ! நின்கடன் ;

என்னும் நாமம்.

என்பது திருமங்கை மன்னன் அருளிச் செய்த பெரிய திருமொழி. 1.1.1. 888. பொறை—பொறுமை. தெருள்கொள்-தெளிந்த. 893. அமைவிலேன்—பொருத்தமில்லாதவன். 895. அல்லார் மேனி-இருண்டகரியஉடல். 896. விழுமிய பீர்—மிக்க அச்சம். 897. குனிபிறை எயிறு-வளைந்துள்ள பிறைபோன்ற பற்கள். 899. கொடு மேதியவன்-கொடுமையைச் செய்கின்ற எருமைக் கடாவைத் தனக்கு ஊர்தியாகக் கொண்டுள்ள யமன். 900. நயனில-இன்பம் நீங்கிய சொற்கள் ; மொழிந்து—கூறி 901. நிரயம்-நரகம். 902. அரந்தை-துன்பம். 908. புரத்தல்-

என்றே பலவு மியம்பிக் கண்களின்
குன்றிழி யோடைக் குளிர்நீ ரன்ன
அருவியோ டவனடி யன்பொடு நணுகி
ஒருதரம் பணியவே யுகக்கு மெம்மான்
பன்முறை வீழ்ந்து பணிதலும் வேண்டா
துன்னு மருளாற் றாயவ னும்மை
ஈண்டு மன்போ டிணைக்கண் சாத்தி
வேண்டு நுங்கள் விழைவெலா மீந்தனம்
காண்டு மென்றே களிப்புட னருளக்
காண்பீர் மன்னே; கவிதரு மையங்கள்
ஓடிப் பதுங்க வுறுநாட் களெலாம்
ஆடிக் கழித்தே யயர்த்தே னென்பீர்;
துன்னு முவகையின் தோன்றுமெய்ப் புளகம்
மன்னிய தனுவின் மறதியுந் தோன்ற
மறந்து நும்மை மன்னு மரங்கம்
திறங்கொ ணாத! தீயே னணுகினேன்
என்பீ ருருக வென்பெலா மிணைக்கண்
அன்பின் சோர வாருயிர் தளர்ந்து,
மாண்பில வினையெலாம் மாய்ந்தன வின்றே;
ஈண்டிய செருக்காம் யானென தொழிந்தன ;
என்னே வியப்பி! தென்னே வியப்பெனப்
பன்முறை பகர்வீர்; பன்னகப் பாயல்
பள்ளிகொண் டருளும் பரம னொருவனே
உள்ளி நம்வினை யோட்டுவா னென்பீர் ;
அருளுடை யவனதம் புயத்திரு தாடொழ
மருளது நீங்கி மகிழ்வீர் மாதோ.
மூன்றாந் தத்துவ முறையி னுணர்ந்து
சான்று மவன்கை சாதிக்கு நாற்பொருள்

காப்பாற்றுதல். 910. குன்றிழி ஓடை-குன்றை விட்டுக் கீழே பாய்ந்து ஓடுகின்ற நீர் அருவி. 916. விழைவு-விருப்பங்கள். 918. கவிதரு-மூடியுள்ள. 922 தனு-உடல். 927. மாண்பில வினை-மாட்சிமைப்படாத அல்லது தகுதியற்ற செயல்கள். 930. பன்னகம் பாயல்-ஆதிசேஷசயனம். 935. மூன்றாந் தத்துவம்-ஈசு

என்னு முண்மையை யெளிதி னுணர்வீர்;
துன்னும் படிமிசைத் துயர்தரு சூழலின்
தாக்கி நும்மைத் தளர்த்திப் பிறர்க்கே
ஆக்கிய வைம்பொறி யழிந்ததுங் காண்பீர்.
நெடுநீர் மூழ்கினும் நீள்வரை யேறினும்
படுத லின்றிப் பயிறரு மகப்பகை
ஆறு மறுமே; அவரவர் செய்வினை
ஊறும் நீங்க வுறுவதாம் பிறவியோர்
ஏழு மும்மை யெதிரா தோடுமே;
தாழும் பிறப்பினீர் தவிக்குங் காலை
அறுபொரு ளிவனென வறிவது மாவீர்;
உறுபொரு ளிவனெனு முண்மையு மறிவீர்;
விண்ணு மண்ணும் வியன் பேரண்டமும்
நண்ணி யளந்த நாரண னெம்மான்
தன்னிலை யைந்துந் தகைபெற வுணர்ந்து
மன்னு நான்மறை மந்திர மொழிகள்
பன்னு நூல்கள் பலவுங் கூறும்
முன்னவன் தாள்களின் மொய்ப்பதுஞ் செய்வீர்;
முன்னிய குணங்கள் மூன்று மதனுள்
துன்னிய விரண்டுந் தொலைந்தன வாகிச்
சத்துவ மொன்றே சார்ந்துமை யணுகச்
சித்தது பெற்றுச் சீரங்க னெம்மான்
மண்ணொடு விண்ணும் மாபெரும் பூதமும்

வரதத்துவம். 938. படி-பூமி. 942. படுதல்-அழிதல். அகப்பகை ஆறு-காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. 944. ஊறு-தீமை. பிறவியோர் ஏழு-தேவர், மக்கள், ஊர்வன, விலங்கு, புள், நீர்வாழ்வன, தாவரம் என்பன. 947. அறு பொருள்-எல்லாம் அற்ற காலத்தில் கை கொடுக்கும் பொருள். 948. உறுபொருள்—பொருந்தும் பொருள். 951. நாரணன் தன்னிலையைந்து-பரம், வியூகம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமி என்பன. 955· குணங்கள் மூன்று-ரஜோகுணம் தமோ குணம், சத்துவகுணம் என்பன. 956. இரண்டு-ரஜோகுண தமோ குணங்கள். 958. சித்து-அறிவு. 960. இமையவர் காவலன்-இந்தி

கண்ணிய விமையவர் காவலன் முதலா
எவ்வகைத் தேவரு மெவையு மகப்படச்
செவ்விதி னொருபொருள் சிதறுத லின்றி
முழுவது மகப்படக் கரந்து முந்நீர்
எழுவீ ழிலையி னெழில்கொளச் சேர்ந்த
ஒருதனி முதல்வ னென்பது முணர்வீர் ;
பெருவினை யுடலாப் பிறந்தபே ராயமாம்
புதல்வரு மனையு பொருந்து கிளையாம்
சிதலி னறுக்குஞ் சிறுமையோர் தாமும்
பவ்வ முதிக்கும் படுநீர்ச் சுழியும்
எவ்வ மூட்டு மிடங்கரு மென்பீர் ;
தந்தையுந் தாயுந் தன்கைத் தனயனும்
சொந்தமா மில்லும் சுற்றத் தவரும்
போற்றுந் தோழரும் பொருணனி வேட்டே
ஆற்றுந் தொழிலி னடியவர் தாமும்
நறுவிரை மிகுதுழாய் நாலு மலங்கல்
மறுவிற் புகழ்சேர் மாதவ னென்பீர் ;
முன்னிய வேத முடியென விளங்கித்
துன்னிய பிரணவத் தொருபொரு ளதுவும்
நச்சர வணை துயில் நாத னென்றே
உச்சியிற் கையை யுயர்த்துவீர் மாதோ.
பாவ மனைத்தும் பஃறிசை யோடித்
தாவம் வீழ்ந்து தகிப்புற வதற்குக்
கழுவா யாகிக் கவின்பெறு வட்டிலின்
தொழுங்கை யினூர்ந்து தூய்மையிற் றுலங்கி

ரன். 963. கரந்து-மறைத்து. 964. வீழ்இலை-ஆலிலை. 966. உடலா-காரணமாக. ஆயம்-கூட்டம். 968. சிதல்-கறையான். 969 பவ்வம்-கடல்; படுநீர்ச்சுழி-அகப்பட்டவரை உள்ளே அழுத்தி இழுத்துச் செல்லும் நீர்ச்சுழி. 970. எவ்வம்-துன்பம் ; இடங்கர்-முதலை. 975. அலங்கல்-மாலை. 977. பிரணவத்தொருபொருள்-பிரணவ மஹா மந்திரத்தின் உள்ளீடான ஒப்பற்றபொருள். 982 தாவம்-காட்டுத்தீ. 983. கழுவாய்-பிராயச்சித்தம். 985-86.

நண்ணு முயிரும் நலமா ருடலமும்
பண்ணும் புண்ணியப் பயன்து பெறுவான்
தேக்கிய வவன்றன் திருவரு ளெனவே
ஆக்கிய தீர்த்த மருளப் பெற்று,
இருந்தவப் பயன தெய்திய தெனவே
திருந்தப் பருகித் திளைப்பீர் மாதோ ;
மாறன் நோற்று மகிழுடன் பெற்ற
மாறன் னடிகளாம் மலர்ச் சடகோபம்
வந்துநும் முடியுற வணங்கித் தீவினை
சிந்திய தென்றே செருக்குவிர் மாதோ ;
இச்சையின் மறைகளிணையடி சாத்திய
பச்சைத் துழாயைப் பத்தியி னேற்றுநும்
மிச்சை நீங்க மிக்கோ ராவீர் ;
இச்சையாற் றோன்றி யிச்சைக் குவித்தாம்
பன்னுநும் பிறவி பயன்பெற வேண்டின்,
மின்னே ரிடையார் மெல்லியர் திறத்துப்
பழுதே பலபகல் பயனறப் போக்கிக்
கழுதெனத் திரிந்த கடையனேன் யானும்
ஆங்கே சென்றவ னழக தொழுகும்
வீங்கிருள் படிவ வியன்சே வடியை
வணங்கி யுய்ந்தனன் வளம்பட மாதோ ;
பிணங்கும் பொருளி னிணங்கு முயிரை

நண்ணும்...பெறுவான்-எம்பெருமானது திருவாராதன தீர்த்தத்தால் ஆன்மத் தூய்மை, உடல் தூய்மை, புண்ணியம் ஆகிய இவை உண்டாகும் என்பது கொள்கை. 990. திளைப்பீர்-அநுபவிப்பீர். 991. மாறன்-ஸ்ரீநம்மாழ்வார் என்கிற ஸ்ரீசடகோபன். 992. மால் தன் அடிகள்-திருமாலின் திருவடிகள். ஸ்ரீசடகோபன் விரும்பித் திருமாலின் திருவடிநிலைகளைத் தமக்குப் புகலிடமாகக் கொண்டமையின் அத்திருவடிநிலைகள் ஸ்ரீசடகோபம் என்று வழங்கப் பெறும். ஸ்ரீசடகோபன் விரும்பி யடைந்தவிடம் ஸ்ரீசடகோபம். 997. மிச்சை-அஞ்ஞானம். 1002. கழுது-பேய். 1004. வீங்கு இருள் படிவம்-மிகுதியாக இருண்ட திருமேனி. 1006. பிணங்கும் பொருள்-ஒன்றோடொன்று கலவாமல் மாறுபடுகின்ற

அலேக்கு மைவரை யறுவ ராக்கிய
நிலேயின் தவத்து நித்தர் களாகுஞ்
சோதி யரவும் சூழ்பணிப் புள்ளும்
ஆதியை வணங்கு மாகுலத் தாசிடை
சோதி வேத்திரஞ் சுழற்றிச் செங்கோல்
நீதி நிகழ்த்து சேனை நா யகனும்
முக்கோல் பிடித்த முனிவரும் பிறரும்,
தக்க கொள்கையிற் றனித்தியல் தொண்டரும்
எத்திறத் தினரு மிருந்தங் கின்பம்
பத்தியி னுகர்தரு பான்மைத் தாயது;
சித்த சாரணர் சீர்நிலம் படிந்து
முத்திய னதியின் மூழ்கி யெழுந்து
அத்தவோ! வரங்க! வாறிரண் டெழுத்தின்
வித்தவோ! வென்று விளிப்பா ரொலியது
திக்குண மென்பது தீர்ந்தே நிற்பது;
தேக்கு மின்பமே திளேக்கு நிலமாய்க்
காலே நண்பகல் மாலே யென்னுக்
கால வியல்பைக் கடந்தே நிற்பது;
விண்ணு மண்ணும் விளங்குபே ரண்டமும்
நண்ணும் பொருளும் நவிலும் பூதமும்
எண்ணி வணங்கு மியற்கைத் தாயது;
புண்ணியர் பலரும் புரிந்தறம் புரிவது;
வைணவர் பலரும் வார்சடை யீசனும்
பேண நோற்ற பிரமனும் வலாரியும்
முற்றத் துறந்த முனிவரர் பலரும்
உற்றப் பதியை யுவகையி னுடி

பொருள்கள். 1009. அரவு-திருவனந்தாழ்வான். புள்-கருடன். 1010. ஆதி—திருமால். ஆகுலத்து ஆசிடை—ஆரவாரத்தோடு கூடிய கூட்டத்தின் இடையில். 1011. வேத்திரம்-பிரம்பு. 1013. முக்கோல் பிடித்த முனிவர்-ஸ்ரீவைஷ்ணவ சந்நியாசிகள். 1018. முத்தியல் நதி-முத்துப்போன்ற நீரோடுகின்ற பாலாறு. 1019. அத்தவோ-தலேவனே. ஆறிரண்டு எழுத்து-துவாதசாக்ஷர மகா மந்திரம். 1030. வலாரி-இந்திரன். 1033. ஒரீஇ-விட்டுநீங்கி. 1034.

தீதி லறம்பல செய்தலி னெரீஇ
ஓது மறுகுணத் துத்தமன் றன்னைப்
போது றழ் பொன்னடி போற்றுவர் காண்மின்
சூதட ரவயவச் சுந்தரத் தோளனை
நீல நிறங்கொள் நெடுமுகி லவனை
ஏலவார் குழலிதன் இன்ப மணாளனை,
பயனது கருதாது பரிந்தவன் சேவடி
நயந்து வேட்டு நான்மறை நவிலும்
சரணா கதியினைச் சடக்கெனச் செய்ம்மின் ;
அரணாந் திருநக ரடைவீர் ; அதனொடு
வன்பெரு பாச வல்வினை நீங்க
இன்பமே யுருவா யியங்குவீ ரென்றிதைக்
கோதிலா ஞானக் குரவர் தாமும்
ஓதின ரெவர்க்கு முலகின் மாட்டே ;
ஓதினே னானு நுமக்குறு பொருடனை
வாதி யாதே வந்தார் பணியின்
அறி துயில் கொள்ளு மமலன் றன்னை
நெறிகொள வணங்கி நிற்பீர் மாதோ ;
பொய்யா மறையெலாம் பொய்த்தே விடினும்,
செய்யவ ளின்மையைச் செய்தே விடினும்,
கதிர்வெண் மதிகள் கதிமா றிடினும்,

அறுகுணம்-நிறைந்த மகிமை, கீர்த்தி, ஐசுவரியம், தைரியம், ஞானம், வைராக்கியம் என்பன. இவ்வறுகுணங்களுக்கும் **பகம்** என்ற பெயர் உண்டு. ஆதலால் இவ்வறு குணங்களையுமுடைய திருமாலுக்குப் **பகவான்** என்ற பெயர் வந்தது. 1035. போது உறழ்-செந்தாமரை மலர்போன்ற. 1036. சூது-தாமரை. 1037. முகில்-மேகம். 1038. ஏலம்வார் குழலி-வாசனை வீசப்பெற்ற நீண்ட கூந்தலையுடையவளாகிய திருமகள். 1039. பரிந்து-அன்பு கொண்டு. 1045. ஞானம் குரவர்-உண்மை அறிவை எடுத்து உபதேசம் செய்யும் குருக்கள். 1048. வந்து ஆர் பணி-காற்றை உணவாகக்கொள்ளுகின்ற பாம்பு ஆகிய ஆதிசேஷன். 1052. செய்யவள்-திருமகள். இன்மை-வறுமை. 1053. கதி-செல்லும் வழி.

மதிபெறு முண்மை மலைத்தே விடினும்,
விதியன பெரியோர் விதந்து கூறிய
துதிதரு மொழிகள் துவளில வென்றும்;
உண்மை யதனை யுரைத்தேன் முன்னோர்
எண்ணிய பொருளு மிதுவே காண்பீர்;
அருமொழி தன்னை யமுதெனக் கொள்வீர்;
பெருநான் மறையின் பெரும்பொரு ளுணர்வீர்
திருந்திய மனத்துத் திகைப்பற நீக்கி
இருத்தும் பொருளு மிதுவே; ஆகப்
படிமிசை யடியவர் முடிகொடு வணங்கும்
மடிகொ டேவரும் பலரே; அவர்தாம்
அளிக்கும் பரமும் பலவே; அவற்றைத்
தெளிக்கும் நூலும் பலவே; தெரிதர
நோக்கின் உண்மைய சிலவே; அவையும்
போக்கிற் றன்மைய பொருந்திய வாகிச்
சேர்தரு முரணொடு செறிதலுங் காண்பீர்;
சோர்வுடை நூற்றுணி சிக்குடைப் பொருளைத்
தேர்தலு மறியீர்; தேரவும் வாணாள்
நேர்தலு மில்லீர்; நேரினு மப்பொருள்
மாணா தெனவே மதிப்பீர் மாதோ.
காணாப் பொருடான் கணித்தற காமோ?
உலக வாழ்க்கையா முவர்க்கட லதனில்
விலக லறியாது வீழ்ந்து பன்முறை
புதுப்பொரு டன்னின் பொதுமை நோக்காது
விதுப்புற வதனை விழைந்து வெதும்பி

1054. மலைத்தேவிடினும்-தடுமாறினும். 1055. விதி அன பெரியோர்-பிரமதேவன் போன்ற பெரியவர்கள். விதந்து-மிகுத்து. 1056. துவளில-அசைவன அல்ல. 1060. நான் மறை-இருக்கு யஜுஸ், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்கள். 1063. படி-பூமி. 1064. மடிகொள் தேவர்-பொய்த் தேவர் அல்லது கேட்டை விளைவிக்கும் தேவர். 1066. தெளிக்கும்-தெளியச் செய்யும். 1069. முரண்-மாறுபாடு. 1073. மாணாது-மாட்சிமை யற்றது. 1077. பொதுமை-யாவர்க்கும் உரியதாம்தன்மை. 1078.

கரைதபு கலமெனக் கரைந்து, கலித்துத்
திரையு மாசையான் திளைத்து, நின்று
அலையு மளியீர்! அகறரு முலகின்
நிலையில் பொருளை நீள நினைந்து
மீண்டுந் தேடி மிறைத்து மனத்து
வேண்டுநம் பொருடாம் விரைவி னெய்துமோ
எனவகங் குழைஇ யேதிலர் நகைக்கத்
தினமு மதனைத் தேடும் திருவிலீர்!
தாழ்ந்த பொருளாந் தனத்தைத் தேடி
மாழ்கு மனத்தீர்! மன்னுப் பொருளால்
உள்ளமு முடலமு மொருவழிச் சேர
விள்ளுங் கொல்லிவ் விதியென மாழ்கும்
எளியீர்! ஐயங்கியா னணுவி னுகர்ச்சிதான்
அளிக்கு மானந்தக் கடலி னழுந்தித்
தேடற் கருபொருள் தெய்வ நாயகன்
நாடற் கெளியன் காரண னெம்மான்
புரவியின் வந்தருள் பூரண னொருவனும்
பரமனைக் கைவிட்டுப் பயன்தபு வினையின்
அவன தருளா னமைந்தநுந் நாட்களைப்
பயனில வாக்கிய பண்பிலீர்! பேறவன்
தொண்டே நமக்கெனத் தோய்ந்ததை நாளும்
கொண்டே புரியுங் குணத்தினிர்! நும்மீ

விதுப்பு உற-ஆசை கொண்டு. விழைந்து-விரும்பி. 1079. கலம்-மரக்கலம். கலித்து-ஆரவாரித்து. 1081. அகறரு-அகன்ற. 1083. மிறைத்து-வருந்தி. 1085. ஏதிலர்-அயலார். 1088. மாழ்கும்-மயங்கும். மன்னு பொருள்-நிலையில்லாத பொருள். 1090. விள்ளுங்கொல்-விட்டு நீங்குமோ? 1091. ஐயங்கி-நான்கு திக்குகளிலும் அமைக்கப்பட்ட நான்கு நெருப்புக்களோடு மேலே விளங்கும் சூரியனும் சேர்ந்து ஆன ஐவகை நெருப்பு. அணுவி னுகர்ச்சி-கைவல்யம். 1095. புரவியின் வந்தருள் பூரணன்-அசுவினி நக்ஷத்திரத்தில் திருவவதாரஞ் செய்தருளிய முழுமுதற் கடவுளாகிய ஸ்ரீரங்கநாதன். ஒருவன்-ஒப்பற்றவன். 1096. பயன்தபு வினையின்-பயன் நீங்கிய செய்கைகளால். 1099. தோய்ந்து-கலந்து;

திரங்கி நுவன் றனன் தெளிபொருள்
அரங்க லளிக்கு மரும்பொரு டானெனன. 1102.

மூலம் முற்றிற்று.

சேர்ந்து. மேற்கூறிய அதிகாரிகள் முதல் மூவரிடத்தும் இரங்கியது அவர்கள் செல்வழி தகுதியற்றதாகிக் காலம் வீணில் செல வழிக்கப் படுதலாலும், நான்காமவரிடத்து இரங்கியது அவர்கள் தங்கள் தொண்டுக்குத் தக்கவிடம் கிடைக்காமல் தவிப்ப தாலேயும்.

மடமுறுமக்காள்! வகுப்பல் கேண்மின்20 தொருமும்பருமரி யரே36. வெள்கும் மக்காள் கேண்மின்49-50. மக்காள்! கேண் மின்66-67. தனிமையிற் பயில்வதென் ?70. உற்றதென்79. வடவரங்காள்வான் மாண்கழலேத்துமின். 93. காண்பல் என் மின்96. வாழ்த்துவல் என்மின்98. பற்றிவம்மின்101.உயர் மின்102. என்பீர்வம்மின்136-137. காட்டுவல் வம்மின்139. செல்வதுமறிவீர்150. என்னே செல்வம்? என்னே செல்வம்? 152. பெருமதி கொள்மின்153. உகக்கும் மக்காள்165. நாடு மக்காள் 165. இழித்தே இகமின். இனவீர்! வம்மின் 177. தேடுமின் 179. இகமின் 185. (நால்வகை அ தி கா ரி க ள்!) இருக்கு மிடமும் 190 பண்பமரிடமும், 191 உ ண ர் த் து மி ட மும் 192, ததும்புமிடமும் 153 இயம்புவன் கேண்மின் 194. (அது) தொண்டை நாட்டில் உத்தரவரங்கென உறுபேருறுவது 212. (அங்குக்) காழ்வரையும் 296. பேயாறும் 302, கிடங்கும் 306, பிரம்பும் 332, கோட்டமும் 340, மறுகிருசிறையும், வியாச புட்கரிணியும் 363, மண்டபமும் 366 அவதார மண்டப மும்367, வாகன மண்டபமும்369பானதித் துறையுங் கண்டு378 படிந்து, போற்றி 379 சாத்துமின் 382. கையுறை 389 கொளீஇ 390 வீழ்ந்து ப ழ வி னை கழிமின் 396. வணங்குமின் 406. தேவப் பெருமாளும் 410, மீளியும் 412 காஞ்சிபூரணனும் 418 தண்டு பவித்திரம் தம்மொடு 437 பாப்பின் தோற்றப் பரமன் தானும் 441 நயந்துறை கோயில் முற்றம் வீழ்ந்து வணங்குமின் 446. மாறன் தன்னொடு 462 பொய்கை 463 மு த லா உல காரியனொடு 470 துதி செய்வார்தமை வணங்குமின் 472 அரங் கத்தொருபெருந் தேவி தன் அடிகளை 481 எத்தி 486 செல்மின்

484. தூயோன் பொற்கழல் புனைந்து 498 உட்செலினே பெயர்தர விரும்பீர் 489 புனிதன் தன்னை வணங்கி 571, மேற்றிசை இரீஇய அறிதுயிற்கோளிதன் 573. தொண்டரியற்றுநர் தந்தேத்துக்கையுறையளிமின். 576. மேனிகண்டவளவில் 645 நீவிரும் 647 கோகுகட்டி வீழ்ந்து 650, வாழ்த்தி 367 மருளது நீங்கி மகிழ்வீர் 934. தீர்த்தம் அருளப்பெற்று, பருகி 990, மலர்ச்சடகோபம் முடியுற 993, பச்சைத்துழாயை ஏற்று 996. 998 மிக்கோராவீர் 997. ஆங்கே சென்று அவனது அழகதொழுகும் வீங்கிருள் படிவ வியன்சேவடியை வணங்கி யுய்ந்தனன் (யான்). 1005. [ஆதலின் நீவிரும்] பயன்பெற வேண்டின் 999 சரணகதியினைச் செய்ம்மின். 1041 அடைவீர் 1042. இயங்குவீர் 1044. அளியீர்! 1081. மனத்தீர் 1088 எளியீர் 1091 பண்பிலீர் 1098 குணத்தினிர் 1102, நும்மீதிரங்கி நுவன்றனன் தெளி. பொருள் அரங்கனளிக்குமரும்பொருடானென 1101, 1102 என்றது இவ்வாற்றுப்படையின் பொருள்கோள்.

குறிப்புரை முற்றிற்று.

—(:✱:)—

ஸ்ரீ

காா்தவழ் கடிநக ரீதெனச் சீர்த்திப்
பேர்தனைப் பெறூஉம் கார்க்கூர்ச் சங்கரன்
புல்லலர் குடிவரு புண்ணிய னெவர்க்கும்
நல்லவை நாடி நயம்பெறச் செய்வோன்
பள்ளி கொண்டைப் பரமனைப் பாடென
கொள்ளுங் குறிப்பின் கூர்ந்த வன்பால்
பாரியல் வியவின் பங்குனித் திங்கள்
ஏர்புறு *முரச முச்ச மெய்துநாள்
நால்வகை யதிகரை நலம்பெற விளித்து
ஏல்வகை யாற்றுப் படையொன் றியம்பினன்
மாறன் பொன்னடி மனத்தி னிருத்திக்
கூறும் மளிகையர் குடியின் வந்தோன்
பள்ளி கொண்டைப் பதியினன் பண்பமர்
ஒள்ளியோன் வேணுகோ பால வுரவோனே.

---

*. முரசமுச்ச மெய்துநாள்—உத்திரட்டாதி நக்ஷத்திரம்.

இந்நூலாசிரியர் இயற்றிய பிற நூல்கள்.

1.	சம்பக மாலினி	0	8	0
2.	குலசேகரன்	0	8	0
3.	சரசுவதியந்தாதி (குறிப்புரையுடன்)	0	4	0

இவற்றில் முதல் இரண்டு பல பள்ளிக்கூடங்களில் பருப் பொருள் பாடமாகவும் மூன்றாவது கடவுள் வாழ்த்துப் பாடமாகவும் வழங்கிவருகின்றன.

விரைவில் வெளிவரும்.

4.	ஸ்ரீ உத்தரரங்க மாஹாத்மியம் — வடவரங்கக்ஷேத்திரத்தின் பெருமைகளை விவரிக்கும் ஓர் வசன நூல்.	0	8	0
5.	மகதன்—ஓர் இனிய துப்பறியும் நவீனகம்			
6.	மகாத்மா கபீர்—ஓர் இனிய நாடகம்	0	4	0
7.	ஸ்ரீரங்கநாதன், திருவங்கநாய்ச்சியார், கண்ணன் இவர்கள் நேர் உருவப் படங்கள் தனித்தனி	0	2	0
8.	வாழ்த்தலங்கல் (கடவுள் வாழ்த்துக்குரிய செய்யுட்களின் தொகை)	0	2	0
9.	கோயிற்சிறப்பு (வடவரங்க க்ஷேத்திர விவரம்)	0	4	0

இவற்றோடு பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய பல புத்தகங்களும் சுத்தமான தமிழ் நூல்களும் கிடைக்கும்.

ஸ்ரீ சாரதா விலாசபுத்தகசாலை
ஸ்ரீரங்க விலாசம்
பள்ளிகொண்டை :: வடவாறுகாடு.